# ஒளிபடைத்த கண்ணினாய் வா! வா!

24

பிரபாத் புக் ஹவுஸ்



பூவை. எஸ். ... கம்

# ஒளி படைத்த கண்ணினாய்!
# வா! வா!

பூவை எஸ். ஆறுமுகம்

பிரபாத் புக் ஹவுஸ்,
19, சோமநாதன் தெரு,
பொன்னுசாமி நகர்
பெரம்பூர், செம்பியம், சென்னை—

முதல் பதிப்பு : 1990

உரிமை:

திருமதி ஆ. அகிலாண்டம்—

பூவை எஸ். ஆறுமுகம்

பூவை மாநகர் P. O., 614624

(புதுக்கோட்டை மாவட்டம்)

விலை : ரூ. 13—00

அச்சிட்டோர்:

தியாகராயா பிரிண்டர்ஸ்,

18, வ. உ. சி. தெரு,

சென்னை-17.

# முன்னுரை

சொல்லப்போனால், சின்னச் சின்னக் கதைகள் தாம் சின்னச் சின்ன உலகமாக அன்றும் விளங்கியது; இன்றும் விளங்குகிறது!

கதைகள் உலகம் மாத்திரமன்று; அந்தக் கதைகளே உலகியல் வாழ்க்கையாகவும் அன்றும் அமைந்தன; இன்றும் அமைந்திருக்கின்றன,

"இளைய பாரதத்தினாய்! வா! வா! வா! என்று முத்தாய்ப்பிடும் தேசிய மகாகவி சுப்பிரமணிய பாரதியார், "ஒளி படைத்த கண்ணினாய் வா! வா! என்று வரவேற்புரை வழங்குகிறார் அல்லவா?......

அப்படிப்பட்ட அன்புத் தம்பி, தங்கைகள் பயன் பெறும் வகையில் சத்தியமானதும் தருமமானதும் உண்மையானதுமாள உலக வாழ்க்கை மேம்பாட்டுத் தத்துவங்களை இந்தக் கதைகள் ஒவ்வொன்றும் உங்களுக்குப் பாடம் சொல்லும்! இவை யெல்லாம், அந்நாளில் நான் பணிபுரிந்த 'உமா' 'மனிதன்' மற்றும் 'பொன்னி' இதழ்களிலும் சென்னை வானொலிநிலையத்தின் கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சியிலும் இடம் பெற்றவை.

உங்களுக்கெல்லாம் என் நல்வாழ்த்துகளும் என்றுமே உண்டு.

பதிப்பகத்தினருக்கு நன்றி.

பூவைமா நகர்
9-5-1990

அன்புடன்
பூவை. எஸ். ஆறுமுகம்

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| 1. | பூவை மாநகர் சின்னஞ் சிறிய கிராமம்தான் | 5 |
| 2. | நீதிகாத்த தருமம் | 12 |
| 3. | கொடுக்கும் அன்பு | 20 |
| 4. | மெய்க்காப்பாளன் | 25 |
| 5. | பராசக்தி வாள் | 32 |
| 6. | தாஷ்கண்ட் வாள் | 39 |
| 7. | கருநெல்லிக் கனி | 47 |
| 8. | கா...கா...கா...! | 54 |
| 9. | இதோ காந்தி ராஜ்யம் | 59 |
| 10 | மகாத்மாவும் திருடனும் | 66 |
| 11. | கண்ணாமூச்சி ஆடலாம் | 73 |
| 12. | பிஞ்சு நெஞ்சு | 78 |
| 13. | தீபாவளி வேடிக்கை? | 84 |
| 14. | அந்த ஆண்டி எங்கே | 89 |
| 15. | அரிச்சந்திரன் நெ 2 | 95 |
| 16. | நான் பெற்ற செல்வம் | 101 |

# ஒளி படைத்த கண்ணினாய் வா! வா!

## பூவை மாநகர் சின்னஞ்சிறிய கிராமம்தான்

தேசிய உணர்வு மிகுந்த அதன் ஊராட்சித் தலைவரின் பெருமுயற்சியின் விளைவாகக் கிராமத்தின் வடகோடியில் உருவாக்கப் பட்டிருந்த காமராஜர் புரம் ஹரிஜனப் பகுதியிலும், கடந்த சுதந்திரதின விழாவன்று அரசின் ஆரம்பப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. பள்ளியின் ஆரம்ப விழாவில் நாட்டின் சுதந்திர நாள் விழாவும் சேர்ந்து கொண்டது.

நாட்டுப் பற்றும் சமுதாயக் கடனும் நிரம்பப் பெற்ற காந்திராமன் பள்ளியின் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்றதிலிருந்து பள்ளியின் நடைமுறைகளிலே புதிய மலர்ச்சி ஏற்படத் தொடங்கியது.

அன்று:

பகல் உணவு வேளைக்கான மணி அடிக்கப் பட்டது.

ஏழைப் பிள்ளைகள் வரிசை வரிசையாகவும் தட்டும் கையுமாகவும் சத்துணவுக் கூடத்தை நோக்கி நடக்கத் தலைப்பட்டனர். தட்டுக்களிலே சத்தான உணவு நிரம்பியது.

கண் நிறைந்த அந்தக் காட்சியைக் கண் கொள்ளாமல் பார்வையிட்ட காந்திராமன் பெருமை யும் பெருமிதமும் கொண்டவராகத் தமது அறைக்குத் திரும்பினார்.

தட்டுக்களிலே சத்தான உணவு நிரம்பி வழிந்தது.

சிறுவர்—சிறுமியரின் முகங்களிலே மகிழ்ச்சி நிரம்பி வழிந்தது.

சாண் வயிறுதான்!—ஆனாலும் அதன் பசிக்கு அளவில்லை அல்லவா?

அவரவர்கள் உண்ணத் தொடங்கினர்.

ஆனால்—

நேரு மட்டும் சாப்பிடாமல், சிந்தனை வசப் பட்டவனாக உட்கார்ந்திருந்தான். மறு நிமிடம் ஏதோ முடிவுக்கு வந்தவனாக எழுந்தார்; சுற்று முற்றும் பார்த்தார்; உணவுத்தட்டுடன் விரைவாக நடக்கத் தொடங்கினான்.

அப்போது—

உண்டு முடித்துக் கைகழுவிக் கொண்டிருந்த தலைமை ஆசிரியர் காந்திராமனின் பார்வையில் நேரு தென்பட்டான். ஏக்கமும் கவலையும் மிஞ்ச நேருவைத் தொடர்ந்தார்;

காலடி ஓசை கேட்டதுதான் தாமதம்!—திரும்பிப் பார்த்தான் நேரு. அவனுக்கே உரிய உண்மைத் தெளிவுடன் தலைமை ஆசிரியரை நேர்கொண்ட பார்வையால் நோக்கினான்!—"ஐயா! என்னோட அம்மாவுக்கு நாலு நாளாக உடம்புக்கு முடியலீங்க; நாளும் கிழமையுமாய் உழைச்சு உழைச்சு, என் அப்பாவுக்கும் காய்ச்சல் வந்திடுச்சுங்க! — அதனாலேதான், என்னோட! ராசாங்கத்துச் சாப்பாட்டை என்னைப் பெற்றவங்களுக்காக எடுத்துக்கிட்டுப் போறேனுங்க, ஐயா!... இது தப்பு இல்லீங்களே?" என்றான்!

மனிதாபிமானத்தால் மனம் நெகிழ்ந்தார் காந்திராமன்; அன்போடு புன்னகை செய்தார்; விழிகளிலே கண்ணீர் புன்னகை புரிந்தது. "நேரு உனக்குப் பசிக்குமே?" என்று கேட்டார்.

"என்னைப் பெற்றவங்களோட பசி அடங்கிட்டா, அப்பவே என்னோட பசியும் அடங்கிடாதுங்களா, ஐயா?" என்றான் சிறுவன் நேரு.

அரைக் கணம் மேனி சிலிர்த்திட நின்று விட்டார் காந்திராமன். கதர்ச் சட்டைப் பையிலிருந்து ஒரு ரூபாய்ப் பணத்தை எடுத்தார்;

"இந்தாப்பா பணம், வழியிலே நாயர் சாயாக் கடையிலே இட்டிலி சாப்பிட்டிட்டு வா," என்றார்.

"ஐயா, ஏழையாய்ப் பிறந்த இந்தப் பிள்ளைக்குக் காசு பணம் வேண்டாமுங்க; உங்க அன்பு தாங்க வேணும்!" என்று தயங்கினான் நேரு. பிறகு, தன் கிழிசல் சட்டைப் பையிலிருந்து காகிதம் ஒன்றை எடுத்து மரியாதையாக அதைத் தலைமை ஆசிரியரிடம் கை நடுங்க நீட்டினான்.

"நொடியிலே போய், நொடியிலே திரும்பிடு வேனுங்க, ஐயா!" என்று நேர்மைத் திறம் குலுங்கச் சொல்லிக்கொண்டே பிறகு, குடிசையை நோக்கிச் சோற்றுத் தட்டோடு விரைந்தான். நேரு!

பிற்பகல்—

பள்ளி மீண்டும் செயற்படுவதற்கான அறி விப்பு ஒலிக்கிறது.

ஐந்தாம் வகுப்பில் தமிழாசிரியர் நுழை வதற்கும், அங்கே நேரு வந்து சேருவதற்கும் சரியாகவே இருந்தது.

அப்போது அங்கே வந்தார் தலைமை ஆசிரியர். "அருணகிரி! நம்ப நேருவை உடனே என் அறைக்கு வரச் சொல்லுங்கள்!" என்று கேட்டுக் கொண்ட பின் திரும்பி விட்டார்.

பையன்கள் திடுக்கிட்டனர். ஆனால், நேரு மாத்திரம் திடுக்கிடவில்லையே!—உடனே தலைமை ஆசிரியரின் அறைக்குப் புறப்பட்டான்.

காந்திராமன், "வாப்பா!" என்று நேருவை வரவேற்றார். "அப்படி உட்கார்ந்து, அந்த இட்டிலி தோசையைச் சாப்பிடு," என்றார்.

பிஞ்சு நெஞ்சு தழுதழுக்காமல் இருக்குமா?— "ஐயா!...அன்பு எதையும் கேட்காது; கொடுக்கத்தான் செய்யும்னு காந்திமகாத்மா சொன்னது சத்தியமான வாக்குத்தானுங்க!" என்றான்.

காந்திராமன் வாய் கொள்ளாமல் சிரித்தார்; "அந்தப் பொன்மொழி எனக்கும் தெரியுமே!" என்றார்.

நேருவுக்கு ஐந்தே ஐந்து நிமிஷத்திலே பசி பறந்து விட்டதே!

"நேரு! உன் லெட்டரைப் படிச்சேன்! படிக்க வேண்டிய இந்தச் சின்ன வயசிலே, படிப்பை விட்டுட்டு நீ எடுபிடி வேலைக்குப் போய் உன்னைப் பெற்றவங்களுக்கு நீ படி அளக்கப் போறியா?...உன்னோட இந்த முடிவை என்னாலே அனுமதிக்க முடியாது! உங்க குடும்பத்தை நல்ல படியாகக் கட்டிக் காப்பாற்றவேண்டியது உன் அப்பாவோட கடமையாகும். இளைய பாரதத்தினன உன்மாதிரி நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் கொண்ட கெட்டிக்காரப் பையனை இழக்க இந்தப் பள்ளி விரும்பாது! சரி; நீ போகலாம்!"

என்று தலைமை ஆசிரியர் கண்டிப்பாகக் கூறி விட்டார். நேரு மேனி நடுங்க விடைபெற்றான்.

அந்திப் பொழுது.

நேரு சிந்தனை வசப்பட்டவனாகக் குடிசைக்குள் நுழைந்தான். "அப்பா...அப்பா! நாயர் கடையிலே எடுபிடி வேலைக்குச் சொல்லியிருந்தேன்; என்னைப் பெற்ற தாய் தந்தையோட பசியைப் போக்க வேண்டியது என்னோட கடமை இல்லீங்களா? ஆனா, தலைமை ஆசிரியர் மறுத்துட்டாருங்களே! நான் என்ன செய்வேன்?" என்று விம்மினான்.

"மகனே! கண்ணுக்குக் கண்ணான படிப்பை விட்டுட்டு எங்களுக்குப் படி அளக்கத் துணிஞ்சியா? வேண்டாம்; வேண்டவே வேண்டாம்! படிப்பை விடவே கூடாது! அதுதான் நமக்குச் சொத்து! ராத்திரி மட்டும் நாம பட்டினி கிடப்போம்! அப்பாலே, பொழுது விடிஞ்சிடாதா, அருமை மகனே!" என்று விம்மினார் சாம்பான்.

அப்போது, வாசலில் என்னவோ சத்தம் கேட்டது.

தலைமை ஆசிரியர் காந்திராமன் அங்கே நின்றார்.

"தேடிவந்த தெய்வமாட்டம் வந்திருக்கீங்க!—உள்ளே குனிஞ்சு வாங்க ஐயா!" என்றான் நேரு.

"ஐயா, பெரியவரே! உங்களோட பொறுப் புணர்ச்சியை நான் ரொம்பவும் பாராட்டுகிறேன்! ஆண்டவன் நல்லவன்—நான் இருக்கிறப்ப, நீங்க ளெல்லாம் ஏன் பட்டினி கிடக்க வேணும்? எல் லோரும் இப்பவே என் வீட்டுக்குப் புறப்படுங்க—இனி நேரு என் பிள்ளை!— ஆண்டவனோட நல்ல பார்வை இப்பத்தான் என்மேலே பட்டிருக்குதுங்க! இனி எங்க வீடு கோகுலம்தான்!" என்று உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார் காந்திராமன்.

"ஒளிபடைத்த கண்ணினாய் வா!...வா...!"

அதோ ஆனந்தமாக ஆடிப்பாடிக் கொண் டிருக்கிறான் நேரு!...

# நீதி காத்த தருமம்!

உலகத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழி காட்டவும் துணைபுரியவும் இந்த நீதிக்கதைகள் ஏதுவாகின்றன. உலக வாழ்க்கையை அர்த்த முள்ளதாகச் செய்திட ஆதாரமாகவும் ஆறுத லாகவும் அமைந்த நீதிக் கதைகளின் வாயிலாக மனித வாழ்க்கைக்கு அவசியமான அன்பு, பாசம், நேசம், கருணை, ஒழுக்கம் போன்ற பல்வேறு குண நலன்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. இவ் வகையில், பஞ்சதந்திரக் கதைகள் மற்றும் ஈசாப் கதைகள் குறிப்பிடத் தக்கவை.

பழம் பெரும் நாடான நமது அருமைப் பாரதம் வரலாற்றுப் பெருமை உடையது. நமது நாட்டின் இதிகாசங்களும், காப்பியங்களும், புராணங்களும் சொல்லுகின்ற நீதியின் கதைகள் ஒன்றா? இரண்டா?—சாதிமத பேதங்களைக் கடந்து வாழும் அன்பின் மகிமை, ஒழுக்கத்தின் மேன்மை, மனங் களின் ஆசாபாச விளையாட்டு, ஒற்றுமை மற்றும் ஒருமைப் பாட்டின் தேவை, ஈவிரக்கத்தின் இயல்பு, தேசபக்தியின் சிறப்பு, கடமையின் கண்ணியம்,

நீதி, தருமம் மற்றும் சத்தியத்தின் நெறி முறை முதலான நியதிகளையும் விதிகளையும் யதார்த்த மான இலக்கோடும் இலட்சியத்தோடும் நீதிக் கதைகள் வழங்கவும் செய்கின்றன.

உண்மைதான்! வாழ்க்கை வாழ்வதற்குத்தான்! வாழ்வதற்காக வாழும் வாழ்க்கைக்கு வளமும் வனப்பும்சேர்ப்பதில் நீதியும், தர்மமும், உண்மையும் சத்தியமும் மகத்தான பங்கேற்கின்றன. மாண்பு மிக்க இத்தகைய குண நலன்கள் ஒன்றில் ஒன்றாகவும், ஒன்றோடு ஒன்றாகவும் இணைந்தும் பிணைந்தும் இருக்கின்றன அல்லவா?

நீதி காத்த தருமத்தின் சுவையான நீதிக்கதை ஒன்றைச் சொல்லுவேன்; கேளுங்கள்.

அன்றைக்கென்று சூரிய பகவானுக்கு அப்படி என்னதான் கோபமோ?

வெயில் சூடேறிக் காய்ந்தது.

ராமையா வியர்க்க விறுவிறுக்கப் பதற்றத் தோடு கம்பெனிக்குள் நுழைந்தார்.

பழைய டயர்களைப் புதுப்பிக்கும் கம்பெனி அது.

வேலையாட்கள் பொறுப்போடு பணி செய்து கொண்டிருந்தனர்.

சட்டைப்பையிலிருந்து மாடி அறைச் சாவியைக் கையில் எடுத்துக்கொண்டே சுற்று முற்றும் பார்த்தார் ராமையா. பசி வயிற்றைக் கிள்ளியது. மீண்டும் ஒரு தரம் அந்தக் கூடத்தை நோக்கினார் அவர். எடுபிடிப் பையன் அதிசயம் எங்கே?—விசாரித்தார், ராமையா. அவர்தான் அந்தக் கம்பெனியின் நிர்வாகி. தஞ்சையை அண்டியிருந்த திருக்காட்டுப் பள்ளியில் வசிக்கும் முதலாளியின் அன்பிற்கும் நம்பிக்கைக்கும் பாத்திர மானவர் ஆயிற்றே!

"உங்களுக்கு மத்தியானச் சாப்பாடு எடுத் தாந்து மாடி வராந்தாவிலே வச்சிட்டு வீடு வரைக்கும் போயிட்டுத் திரும்பிடுறதாகச் சொல் லிட்டுப் போயிருக்கானுங்க அதிசயம். அவனோட அம்மாவுக்குக் காய்ச்சலாம்," என்றார் பெரியவர் பெரியசாமி.

"அட, பாவமே!" என்று வருந்தினார் ராமையா. "அதிசயம் பையனும் நல்லவன்; அவன் அம்மாவும் தங்கமானவங்க. அவங்க இரண்டு பேரையும் கர்த்தர் நல்லபடியாய்க் காப்பாற்றுவார்!" என்றார் அவர். மனிதாபிமானத்தோடு அவருடைய கண்கள் கலங்கின. பசித்தது; பசிக்குப் பதில் சொல்ல வேண்டாமா?—மாடிக்கு விரைந்து மாடிக் கதவைத் திறந்தார். ஞாபகமாகச் சட்டையை ஆணியிலிருந்து எடுத்து வெளிச்சத்தில் சட்டை யின் உள்பையைத் துழாவினார். அவருக்குத்

திகீரென்றது!—ஞாபகமாக வைத்துச் சென்ற ஐம்பது ரூபாய் முழு நோட்டை—கரன்ஸி நோட்டைக் காணோம்!—என்ன சோதனை இது?—அன்றைக்குக் கம்பெனிச் செலவுக்காகப் பழைய டயர்களை உரைக்க முள்கட்டை மற்றும் விறகு வகைக்காகச் செலவான ஐம்பது ரூபாய் போக, நூறு ரூபாயில் மிச்சமிருந்த பாக்கி ரூபாய் ஐம்பதையும் சட்டையின் உட்பையிலேதான் வைத்தார். அவர் நினைவு பிசகாதவர்! தேவையான சாமான்களைக் கீழவாசல் கடை வீதியில் வாங்கி வந்து மீதம் ஐம்பது ரூபாயை அவரிடம் இந்த அதிசயம் தானே ஒப்படைத்தான்! மாடி அறையின் கதவை அவரேதான் திறந்தார்! பதற்றத்தோடு பின்புறக் கதவை நோக்கினார். "ஐயையோ!" என்று பதறினார். பின்புறக் கதவை அடைத்துத் தாழிட மறந்துவிட்டார். பாவம்!—பாங்க் நேரம் முடிந்து விடுமே என்ற அவசரத்தில் அங்கிருந்து அறையைச் சரிபார்க்காமல் புறப்பட்டது தவறு என்பதை உணர்ந்தார். உடனே கீழே வந்தார். பெரியவரை விசாரித்தார். மேலே யாருமே போகவில்லை என்று பெரியசாமி சொல்லவே, அவருடைய குழப்பம் அதிகரித்தது; தன் கணக்கில் அந்தப் பணம் ரூபாய் ஐம்பதைப் பற்று எழுதிக் கொள்ள வேண்டியதுதான் என்ற கடமை உணர்வில் மனத்தைத் தேற்றிக் கொண்டவராகச் சாப்பிட்டுவிட்டு எச்சில் இலையைத் தெருக்குப்பைத் தொட்டியில் வீச இறங்கி வந்தார் ராமையா.

தெருவழியே, அப்போது பையும் கையுமாக வீடு நோக்கிப் போய்க்கொண்டிருந்தான் அதிசயம்! —மாஸ்டர் அதிசயம்!

ராமையா திகைப்படைந்தார்; அதிர்ச்சியும் அடைந்தார். பை நிரம்பச் சாமான்கள் வாங்கு வதற்கு அவ்வளவு பணம் அதிசயத்திடம் ஏது? அன்றைக்கான தினக்கூலியான ஐந்து ரூபாயைக் கூட அவன் சாயந்தரம்தானே வாங்கிக் கொள்ள முடியும்? — எச்சில் இலையை வீசிவிட்டு, "அதிசயம்!...அதிசயம்!" என்று சத்தம் போட்டுக் கூப்பிட்டார் ராமையா. அவன் — சிறுவன் அதிசயம் திரும்பியே பார்க்காமல் விரைந்ததை உணர்ந்ததும், ஓட்டமும் நடையுமாகச் சென்றார் அவர். அவன் தோள்மீது கை வைத்ததும் திரும்பிப் பார்த்த அதிசயத்தைக் கம்பெனிக்கு அழைத்துச் சென்றார். வீட்டுச் சாமான்கள் வாங்க அவனுக்கு ஏது பணமென்று அவனிடம் கேட்டார். பக்கத்து வீட்டுச் சோமையாவிடம் ஐம்பது ரூபாய் கடன் வாங்கியதாகவும் அதைக் கொண்டுதான் சாமான் களும் அம்மாவுக்கு மாத்திரைகளும் வாங்கியதாக வும் அதிசயம் சொன்னதை நம்பாமல், வேறொரு வேலையாளை அழைத்து சோமையாவைக் கூட்டிக் கொண்டுவரும்படி கூறினார் நிர்வாகி ராமையா.

அவ்வளவுதான்!

மறுகணத்தில், சிறுவன் அதிசயம் அதிசயமாகவே பதறிப்போய் விட்டான், பாவம்!—"ஸார்!" என்றான். மேற்கொண்டு எதுவும் பேசாமல் தயங்கி நிற்கவே, "என்ன? ஊம், சொல்லேன்!" என்று அதட்டினார் ராமையா.

பயந்து போய்விட்டான் பையன். "ஸார்! என்னை மன்னிச்சிடுங்க. நான் தப்புச் செஞ்சிட்டேன்! அம்மாவுக்குக் காய்ச்சல் அதிகமாயிடுச்சுங்க; அதனாலே வெளியிலே தெரிஞ்சவங்ககிட்டே கைமாற்று வாங்கவும் வழியில்லாமல் போயிடுச்சு; வீட்டிலேயும் அரிசி சாமான்கள் துளியும் மிச்சம் மீதமில்லை. நான் காலையிலே கஞ்சி கூட குடிக்கலீங்க. நீங்க கொஞ்சம் முந்தி வெளியிலே போனப்ப, நீங்க பின்கதவை அடைக்க மறந்ததைக் கவனிச்சுக்கிட்டேன். அதனாலே பின்பக்கத்திலே சுவரேறிக் குதிச்சு அறைக்குள்ளே நுழைஞ்சு உங்க சட்டைப் பையிலேயிருந்த ஐம்பது ரூபாய் நோட்டையும் நானேதானுங்க திருடினேன்!" என்று விம்மினான்.

"திருட்டுப் பயலே!" என்று ஆத்திரத்திலே கூவிய ராமையா உடனே அதிசயத்தைக் கன்னத்தில் அறைந்தார்.

அப்போது, "ஐயா!" என்று அலறிக் கதறிக் கொண்டே தள்ளாடித் தடுமாறி ஓடி வந்து நின்றாள் அதிசயத்தின் தாய் லூர்தம்மா! "ஐயா,

என் ஒரே மகன் அதிசயத்தை அடிக்காதீங்க. அவன் நல்லபையனுங்க!—அவனை நானே தானுங்க திருடச் சொன்னேன்!'' என்று விம்மி வெடித்தாள் தாய்.

அதிசயம் பேயடி பட்டவனாக அதிர்ந்தான். ''ஐயா! எங்க அம்மா சத்தியமானவங்க; தருமமான வங்க! நீதியானவங்க; அன்பானவங்க. என்னைக் காப்பாத்துறதுக்காகவே, பழியை அவங்க சுமந்துக் கிட்டு என்னைக் காப்பாற்ற வேண்டி, அவங்க உங்க முன்னிலையிலே குற்றவாளி ஆகப் பார்க்கிறாங்க, ஐயா!'' என்று கதறினான்.

ராமையா திடுக்கிட்டார்! அதுவரை நல்ல பெயர் எடுத்திருந்த அருமைப் பிள்ளையின் கௌரவத்தையும் மானத்தையும் காக்கவே அதி சயத்தைப் பெற்ற அன்புத்தாய் தானே பழிகாரி யாகப் பொய்க்கோலம் ஏந்த நேர்ந்த விதி அவ ருக்குப் புரியாமல் இருக்குமா? ராமையாவின் கண்கள் மனிதத் தன்மையில் கசிந்தன. கண்ணீர் வழிந்தது! ராமையாவை இழுத்து தன் நெஞ்சோடு அன்புடன் அணைத்துக் கொண்டார்.

அதிசயம் தன் நிஜார்ப் பையிலிருந்த மீதப் பணம் பத்தொன்பது ரூபாயை ராமையாவிடம் அழுது கொண்டே நீட்டினான், பாக்கி ரூபாயை அன்றாடக் கூலியில் கொஞ்சம் கொஞ்சமாகப் பிடித்துக் கொள்ளும்படியும் கெஞ்சினான் சிறுவன்.

அதிசயம் நீட்டிய பாக்கிப் பணத்தை வாங்கி அதை அப்படியே அதிசயத்தின் அன்னையிடம் ஒப்படைத்தார்!—"அம்மா! உங்க அருமை மகன் அதிசயம் செஞ்ச குற்றத்துக்கு நான் தண்டனை கொடுத்திட்டேன்!—நீதி பிழைச்சது; அந்த நீதி உங்களோட அன்பான, பாசமான தருமத்தைக் காத்திடுச்சுங்க, அம்மா! ஏசுபிரான் தானே வழியாகவும் சத்தியமாகவும் ஜீவனாகவும் இருப்பதாகச் சொன்ன வேதவாக்கு எவ்வளவு உண்மை ஆகிடுச்சுங்க, பார்த்தீங்களா அம்மா?" என்று கூறி விம்மினார் கம்பெனி நிர்வாகி ராமையா!

தெய்வங்கள் சிரித்திருக்காதா? அப்போது, அங்கே பொன் விடியலாக, நாணயமான அமைதி நாகரிகமான அன்போடு தவழத் தொடங்கியது!

# கொடுக்கும் அன்பு!

பாலமுருகன் அந்தப் பங்களாவைத் தலை நிமிர்ந்து நோக்கினான். ஏனோ அவனுக்குப் பயம் உண்டாயிற்று. "இவ்வளவு பெரிய பங்களாவிலே இந்தச் சின்னப் பையனுக்கு எங்கே வேலை கொடுக்கப் போகிறார்கள்' என்று எண்ணமிட்டான். பிஞ்சு மனம் வேதனை அடைந்தது. உடனே, வந்த வழியே திரும்பிவிட நினைத்தான் அப்போது, நடந்துவந்த வழியில் கேட்ட மேடைப் பேச்சு அவன் மனத்தில் எதிரொலித்தது. மறு கணம், அவனுக்கு ஒரு நம்பிக்கை ஏற்பட்டது; ஆகவே, பங்களாவின் வெளி வாசலை அடைந்தான் சிறுவன் பாலமுருகன்.

நல்லவேளையாக, அவன் எதிர்பார்த்தபடி, பங்களாவின் வாசலில் 'நாய்கள் ஜாக்கிரதை, என்னும் எச்சரிக்கை எதுவும் காணப்படவில்லை. பின், நாய்கள் எப்படிக் காணப்படும்? அவனுக்கு மற்றுமோர் அதிசயமும் காத்திருந்தது. பங்களாக்களிலே வழக்கமாகக் காணப்படும் கூர்க்காவும்

இல்லை. கூர்க்காவுக்குப் பதிலாக, யாரோ கிழவர் ஒருவர் காலை வெயிலில் நின்றார். கதவுகள் திறந்தே கிடந்தன.

தயக்கம் தெளிந்து, "முதலாளியைப் பார்க்க வேணுமுங்க, பெரியவரே!" என்றான் பாலமுருகன்

காவற்காரர் சிரித்தார் "எங்க முதலாளியையா?" என்று கேட்டார்.

'ஆமாங்க. உங்க முதலாளியைத்தான்' என்று புன்னகையுடன் பதில் சொன்னான் அச்சிறுவன்.

"தம்பி! முதலாளியை இப்போது நீ பார்க்க முடியாது. சின்ன முதலாளிக்கு உடம்பு சரியில்லை. அதனாலே கவலையோடு இருக்காங்க" என்று தெரிவித்தார் பெரியவர்.

"ஆ" என்று அதிர்ச்சி அடைந்தான் பால முருகன். அவனது இளம் மனம் துடித்தது. உடனே அவன் விடுவிடென்று உள்ளே பாய்ந்தோடத் தலைப்பட்டான்.

கூடத்திலே நின்று கொண்டிருந்த முதலாளி பெரியசாமி திரும்பிப் பார்த்தார். "ஏய் நில்லு. யார் நீ? உள்ளே ஏன் ஓடுறே?" என்று ஆத்திரத்துடன் வினவினார்.

பாலமுருகன் அக்கேள்விகளை காதில் வாங்கிக் கொண்டதாகவே தெரியவில்லையே!

பெரியசாமிக்குக் கோபம் பெரிதாக வராமல் இருக்குமா? கோபத்தோடு அச்சிறுவனைத் தொடர்ந்தார்.

அப்போது—

"குமார்! உடம்புக்கு என்னப்பா? நேற்று சாயந்திரம் என்னோடு கோலி விளையாடினாயே" என்று நா தழுதழுக்கக் கேட்டபடி குமாரின் உடம்பைத் தொட்டுப் பார்த்தான் பாலமுருகன் அவன் கண்களில் கண்ணீர் நிரம்பியது.

பாலமுருகனை ஏறிட்டுப்பார்த்தான் குமார். "அழாதேப்பா பாலமுருகா! என் உடம்பு இனி சரியாயிடும். நீ போய் அப்பாவைப்பார். நோயால் அவதிப்படுகிற உன் அப்பா அம்மாவோட நிலை மையை எடுத்துச் சொல்லு. எனக்குக் காய்ச்சல் என்கிறதாலே அப்பா அம்மா நிம்மதியில்லாமல் இருப்பாங்க.

சமயம் பார்த்து, அவரிடம் விஷயத்தைச் சொல்லு. ஆண்டவன் நல்லவன். எங்க அப்பாவும் நல்லவர்தான். அநேகமாக உனக்கு ஒரு நல்லவழி கிடைக்குமப்பா" என்றான்.

"குமார்! எங்க சின்ன முதலாளியோட உடம்பு சீரானதும் எங்க பெரிய முதலாளியை வந்து பார்க் கிறேன்.

நீயும் உடம்பைப் பத்திரமாகப் பார்த்துக் கொள். நாம் ரெண்டுபேரும் மறுபடியும் கோலி விளையாட பகவான் கட்டாயம் அருள்புரிவான்" என்று சொல்லி கும்பிட்டுவிட்டு அங்கிருந்து புறப்பட எத்தனம் செய்தான் பாலமுருகன்.

அச்சமயம்—

"தம்பி! நீதான் பாலமுருகனா? உனக்குவேலை போட்டுக் கொடுக்கவேணும்னு எங்க குமார் ராத்திரியே முடிவு சொல்லிவிட்டானே, இனி என் முடிவு எதற்கு?

மேலும் என் செல்வ மகன் குமார் பேரிலே நீ வச்சிருக்கிற அந்த அன்பும் பாசமும்தான் உனக்குரிய வேலையை எடுத்துக் கொண்டு விட்டதே? நீ இப்போதிருந்தே எடுபிடியாக இருப்பா" என்றார் பெரிய முதலாளி பெரியசாமி.

"ஐயா"! என்று உணர்ச்சிப் பெருக்கோடு அழைத்தான் பாலமுருகன். "இங்கே நடந்து வந்து கிட்டிருக்கையிலே காந்தி மகாத்மாவோட நூற்றாண்டு விழாக்கூட்டம் ஒன்று நடந்திச்சுங்க.

அப்போ "அன்பு எதையும் கேட்காது, கொடுக்கவே செய்யும்" அப்படின்னு காந்தி மகாத்மா சொன்ன பொன்மொழியை விளக்கிக்கிட்டிருந்தார் ஒருவர்.

அந்த அழகான வாசகம் எவ்வளவு மெய்யானது என்கிற உண்மை நடப்பை எங்க சின்ன முதலாளி மூலமாகவும் எங்க பெரிய முதலாளி மூலமாகவும் அறிஞ்சிக்கிட்டேனுங்க" என்று அமைதி கனியச் சொன்னான் பாலமுருகன்.

"பலே பாண்டியா! நீ பிழைத்துக்கொள்வாய். காந்தி மகாத்மா பேரிலே நீ வச்சிருக்கிற நம்பிக்கை உன்னை என்றென்றும் வாழவைக்கும் தம்பி" என்று அன்பு மேலிடத் தெரிவித்தார் பெரியசாமி.

கூடத்துச் சுவரில் தெய்வமாகக் காட்சியளித்த அண்ணல் காந்தி அடிகளின் படத்திற்கு ஆனந்தக் கண்ணீருடன் அஞ்சலி செலுத்திக் கொண்டிருந்தான் சிறுவன் பாலமுருகன்.

# மெய்க்காப்பாளன்

சோழமன்னர் விஜயாலயன் திடீரென்று அன்றைக்கு மந்திராலோசனை சபையைக் கூட்டினார். அதற்குக் காரணம் இருந்தது. அரண்மனையில் வேலை செய்துவந்த மெய்க்காப்பாளர் பட்டியலில் வளவன் என்ற மெய்க்காப்பாளனுக்கு முதுமை வந்துவிட்டதால், அந்தப் பதவிக்கு வேறு தேர்ந்த ஒருவனை நியமனம் செய்யவே அந்தரங்கக் கூட்டம் கூடியது.

ஒரு நாழிகைப் பொழுதுக்குப் பிறகு மன்னர் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

சோழநாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் செய்தி பறையறிவிக்கப்பட வேண்டுமென்றும், மெய்க்காப்பாளனைத் தேர்ந்தெடுக்க நடத்தப்படும் பரீட்சையில் யார் வெற்றி பெறுகிறானோ அவனுக்கே மெய்க்காப்பாளன் பதவி கிடைக்குமென்றும் விவரித்தார் அரசர்.

"அதுவே சரி!" என்றது மந்திராலோசனை மண்டபம்!

* * *

சோழநாட்டின் தலைமையான முக்கூடல் அது. அங்கு பறைஒலி விண்ணைச் சாடியது:

"இதனால் சோழதேசத்து மகாஜனங்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், நம் மன்னர் பிரான் அவர்களுடைய மேன்மையான அரசாணைப் பிரகாரம் வருகிற ஞாயிற்றுக்கிழமை தினத்தில் மெய்க்காப்பாளர் தேர்தலுக்குப் போட்டியொன்று அரண்மனை அரசமண்டபத்தில் நடத்தப்படும். போட்டியில் திறமையுள்ளவர்கள் கலந்து கொள்ள லாம்......!"

அது காவேரிக் கரையின் ஓரம். அங்கு சிறுக்ச் சிறுக கும்பல் சேர்ந்தது. அன்றுதான் ஞாயிற்றுக் கிழமை. சோழவள நாட்டின் அரசமெய்க்காப்பாளர் போட்டித் தேர்வு நாள் அன்றல்லவா?

லிங்கன், வேலன், கந்தன் மூவரும் அப்பகுதி யில் நல்ல பலசாலிகள் என்று பெயர். மூவரும் அப்பொழுது விதவிதமான ஆடையலங்காரத்துடன் தோன்றினார்கள். போட்டியில் வெற்றி யாருக்குக் கிட்டுமோ என்ற பீதி அவர்களின் முகமண்டலங் களை வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

"மெய்க்காப்பாளன் பதவி எனக்குத்தான்!" என்றான் ஒருவன்; இரண்டாமவன் தனக்குத்தான் என்று முழங்கினான்; மூன்றாவது ஆள் தனக்கே உரியது பதவி என்று முரசு கொட்டினான்.

இப்படி இந்த மூன்று ஆண் சிங்கங்களும் வீர கர்ஜனை புரிந்த வண்ணம் நடந்தார்கள் அரண்மனையை நோக்கி.

வழியில் காவேரி குறுக்கிட்டது.

கரையின் விளிம்பில் கால் எடுத்து வைத்தார்கள்.

"அண்ணே" என்று யாரோ ஓர் இளைஞன் கூப்பிட்டான்.

"அண்ணே! நீங்களும் அரண்மனைக்குத்தான் போகிறீர்களா? மெய்க்காப்பாளன் போட்டியில் கலந்து கொள்ளத்தானே...நான் கூட அதற்குத்தான் ஓட்டமாக ஓடிவருகிறேன்...எனக்கு மட்டும் இந்த வேலை கிடைத்துவிட்டால், அப்புறம் என் அம்மா எத்தனை சந்தோஷப்படுவாள் தெரியுமா?.., பிரகதீசுவரர் சுவாமிதான் கருணை பொழிய வேண்டும்..." என்றான் நாலாவது இளைஞனான மாணிக்கம்.

மூன்று புலிகளும் அவ்விளைஞனையே விழித்துப் பார்த்தார்கள்; 'இவனுக்காவது மெய்க்காப்பாளன் வேலை கிடைக்கவாவது' என்ற அர்த்தத்தில் கேலிப் புன்னகை புரிந்தார்கள். மாணிக்கத்தைச் சட்டை செய்யாமல், மூவரும் நடையைக் கட்டிவிட்டார்கள். இளைஞனுக்கு ஏமாற்றமாகப் போய்விட்டது.

அப்பொழுது ஆற்றின் நடுவிலிருந்து ஒரு குரல் எதிரொலித்து வந்தது. யாரோ ஒரு கிழவன் வண்டியில் நடு ஆற்றில் அகப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருந்தபடி, "ஐயாமார்களே, என்னைக் காப்பாற்றுங்கள்... அண்ணன்மார்களே, என் உயிரைக் காப்பாற்ற மாட்டீர்களா?...ஐயோ தண்ணீரில் மூழ்கப் போகிறேனே...!" என்று கூப்பாடு போட்டான்.

மூன்று பீமன்களும் திருப்பிப் பார்த்தார்கள்; 'பூ' என்று கூறிவிட்டு நடந்தார்கள்; மெய்க் காப்பாளன் பதவி அவர்களை 'வா, வா!" என்று அழைத்தது.

இளைஞன் மாணிக்கம் திரும்பினான். நட்டாற்றில் உயிருடன் ஊசலாடிக் கொண்டிருந்த கிழவனின் அபய ஓலம் அவனுடைய கண்களில் கண்ணீரை வரவழைத்தது. முண்டாசை வரிந்து கட்டிக்கொண்டு ஆற்றின் குறுக்கே நீந்தினான். வண்டியுடன் கிழவனை உயிருடன் காப்பாற்றி விட்டான் மாணிக்கம்!

கிழவன் நன்றி சொல்லி, அந்த மாணிக்கத்தைத் தோளுடன் அணைத்துக் கொண்டான்.

"தாத்தா! மனிதர்களாகப் பிறந்ததற்கு இம் மாதிரி ஆபத்துக் காலங்களில் உதவி, ஒத்தாசை செய்யாவிட்டால், அப்புறம் மனிதப் பிறவிக்கு அர்த்தமே கிடையாது. என் பெற்றோர் விட்டுச்

சென்ற சொத்து இம்மாதிரி உபதேச மொழிகள்தாம். நான் போய்வருகிறேன்...''

*    *

கொலு மண்டபத்தில் மெய்க்காப்பாளன் போட்டி நடந்தது. போட்டியில் கலந்துகொண்டவர்கள் ஆவலோடு முடிவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்கள். கூட்டத்தோடு கூட்டமாக அந்த மூன்று புலிகளும் இருந்தார்கள்; கூட அந்தப் பட்டிக்காட்டு இளைஞனான மாணிக்கமும் நின்றான்!

ராஜநிருபர் வந்து, மன்னரின் ஓலையை வாசித்தார்:

''இன்று நடந்த மெய்க்காப்பாளர் பதவி பொறுப்பு நிறைந்தது; அன்புள்ளம்; கடமையுணர்ச்சி எல்லாம் நிரம்பப் பெற வேண்டியது. மெய்க்காப்பாளர் பதவிக்குரிய எல்லா நற்குணங்களும் ஒருங்கே அமையப்பெற்ற மாணிக்கம் என்ற யுவனுக்கே மெய்க்காப்பாளன் பதவியைக் கொடுப்பதாக மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள்....!''

மாணிக்கம் ஆனந்தக் கூத்தாடினான். ''மன்னர் பிரான் வாழ்க!...மன்னர் பிரான் வாழ்க...!'' என்று தன்னை மறந்து வாழ்த்தினான்.

அப்போது, அவன் ஆற்றில் உதவி செய்த கிழவன் வேகமாய் வந்தான். ''தம்பி! நீ வெற்றி பெற்று விட்டாயல்லவா? மெத்த மகிழ்ச்சி...எல்லாம் அவன் செயல்!'' என்று ஆசி கூறினான்.

லிங்கன், வேலன், கந்தன் ஆகிய மூன்று வீரப்புலிகளும் ஏமாற்றம் சூழ சிலைபோல நின்றனர். பீமன் போலிருக்கும் தங்களை விட்டு, யாரோ பட்டிக்காட்டானுக்கு மெய்க்காப்பாளன் வேலை கிடைத்திருக்கிறதே என்று அதிசயப்பட்டார்கள்; ஆத்திரப்பட்டார்கள்.

"மன்னர்பிரான் அவர்களைக் கண்டு என் நன்றியை எங்கள் குடும்பத்தின் சார்பில் தெரிவிக்க வேண்டும்..." என்று கூட்டத்தை நெரித்துக் கொண்டு ஓடினான் இளைஞன் மாணிக்கம்.

"தம்பி, நில்! மன்னனைப் பார்க்க வேண்டுமா? இதோபார்..." என்று சொல்லிய அந்தக் கிழவன், தன் வேஷத்தைக் கலைத்தான்.

மன்னன் விஜயாலயன் தோன்றினான்! "ஆ!" என்றான் வாலிபன்!

"தம்பி! அதோ பார், அந்த மூன்று பேரும் பார்க்க பீமன்சூரன் மாதிரி தோன்றுகிறார்கள். உடல் வளர்ந்திருக்கிறது; ஆனால் அவர்களுக்கு உள்ளம் வளரவில்லையே! பாவம்! நான் காலையில் ஆற்றில் அகப்பட்டுக் கொண்ட கிழவனாக நடித்தது கூட வெறும் நாடகம்; என் சோதனையில் அவர்கள் மூவரும் தோற்றார்கள். உதவி கோரிய போது, ஆபத்துக்கு உதவாமல் 'பூ' என்று அலட்சியமாகப் போய்விட்டார்கள். இப்படிப்பட்டவர்களா என் நாட்டைக் காக்கப் போகிறார்கள்? என்

சோதனையில் முழுவெற்றி பெற்றவன் நீ ஒருவனே! எனக்கு ஆபத்துக்கு உதவினாய், உன் உயிரைக் கூடக் கருதாமல். இப்படிப்பட்ட உள்ளம்தான் மெய்க்காப்பாளனுக்குத் தேவையான முக்கியபண்பு ஆகும். அதனால்தான் வெற்றி உனக்குக் கிடைத்திருக்கிறது...நாட்டின் நன்மைக்கு உன் கருத்து முழுவதையும் பயன்படுத்திப் பணிசெய். பிறந்த பொன்நாடு பெற்ற தாய் போல, நாட்டின் பெரு வாழ்வுதான் உன் வாழ்வின் வளர்ச்சியும் முன்னேற்றமும் ஆகும்...உனக்கு நல்லாயுள் தர இறைவனை இறைஞ்சுகிறோம்'' என்று வாழ்த்தினார் மன்னர்.

மெய்க்காப்பாளன் மாணிக்கம் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான்!

அந்த மூன்று சிங்கங்களும் தம் குற்றங்களை உணர்ந்து, மன்னனிடம் மண்டியிட்டு வணங்கி மன்னிப்புக் கோரினார்கள்!

# பராசக்தி வாள் !

மன்னர் மன்னன் குணேந்திரபாலனின் ராஜ்யம் அப்பொழுது அமளி துமளிப்பட்டது. அந்தச் செய்தி, ராஜ்யத்தின் நாடு நகரம்: காடு கழனி முதலிய எல்லாப் பகுதிகளிலும் காட்டுத் தீ போலப் பரவி விட்டது. செய்தி அறிந்த குடிப் படைகள் கண் கலங்கினர்; இதயம் துடித்தனர்.

அந்தச் செய்தி இதுதான்:

...மன்னர் மன்னன், இருபது ஆண்டுக்ளுக்கு முன்னர் இந்திர விழாவில் காணாமல் போய்விட்ட, தன் ஒரே மைந்தன் இளவரசன் ராஜேந்திர பாலனின் பிரிவை இனியும் தாளாதவராகப் படுத்த படுக்கையில் கிடக்கிறார், அவருடைய இழந்த மகனை மீண்டும் அவர் கண்முன் ஒப்படைப்பவர் களுக்கு அவரது வமிச வழிவந்த மந்திர சக்தி வாய்ந்த பராசக்தி வாளும், அபரிமிதமான பொன் னும் வழங்கப்படும். மகன் இல்லையேல் மன்னரை நாடு இழக்க வேண்டியதுதான்...!'

அமிர்தபுரி ராஜ்யத்தின் மக்கள் அனைவரும் தம் குலதெய்வம் தேவி பராசக்தியை நெஞ்சுருகப் பிரார்த்தித்தார்கள்.

"தாயே! எங்கள் ராஜாவைப் போல இனி எங்களுக்கு வேறு ஒருவர் கிடைப்பதே அரிது. ஆகையால் அவர் புனர்வாழ்வு பெற, நீ அருள் செய். அவருடைய காணாமல்போன மகனை— எங்கள் யுவராஜாவை எப்படியும் நீதான் அவர் கண் முன்னால் கொண்டு வந்து நிறுத்த வேண்டும்...தாயே, மகேஸ்வரி...!"

* * *

குணேந்திரபால மன்னரின் கண்களினின்றும் கண்ணீர் வெள்ளம்பெருக் கெடுத்தோடியது. கைப் பிடியிலிருந்த அந்தப் படத்தினையே வைத்த கண் வைத்தபடி பார்த்துக் கொண்டிருந்தார் அரசர், அது அவரது புதல்வனின் திரு உருவப் படம். பாலவயதில் எடுத்த புகைப் படத்தைக் கொண்டு, தன் மகனை இளவரசக் கோலத்தில் கைதேர்ந்த சைத்ரீகனைக் கொண்டு தீட்டச் செய்த உயிரோவியம் அது. ஓவியம் அவருக்குத் தெம்பைத் தந்தது. ஆனாலும் அது அவரின் கண்ணீரை அதிகப்படுத்திவிட்டதே!

"மன்னர் மன்னா!"

அரசன் திரும்பினான்.

பணியாள் ரவிசேகரன் வணக்கம் செலுத்தி விட்டு முன் வந்தான்: வந்து கையிலிருந்த மருந்தைக் கோப்பையில் கலக்கி நீட்டினான்.

அரசன் அருந்துவதையே பார்த்தான் வேலைக் காரன், தன் தாடியையும் மீசையையும் தடவிய வாறே.

"ரவி! இந்தப்படம் எப்பொழுதும் என் கண் பார்வையில் படும்படி சுவரில் அமை. நீ என்னிலும் வயது சென்றவனல்லவா? நீ சொல், என் இளவரசன் எனக்குக் கிடைப்பானா? என் கையா லேயே என் மகனுக்குப் பட்டம் சூட்டுவேனா? பராசக்தி அருள் பாலிப்பாளல்லவா?..." என்று குரல் நடுங்கக் கேட்டார் அரசர்.

"அரசே! என்னை நம்புங்கள். இளவரசர் கட்டாயம் கிடைப்பார். இப்போதே நான் புறப்படு கிறேன் அவரைத் தேடி. நீங்கள் ஓய்வு பெறுங்கள். வேந்தே!..."

* * *

அன்றைக்கு அமிர்தபுரி ராஜ்யம் கோலாகல மாகத் திகழ்ந்தது. எங்கும் ஒரே ஆனந்தம்!

தேவி பராசக்தியின் ஆலயம் ஜோதிமயமாக விளங்கியது.

மன்னர் மன்னர் குணேந்திரபாலன் இருபது ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அன்றைக்குத் தான் புன்னகை புரிந்தார். ஆம்: அரசரின் காணா மற்போன மைந்தன் இளவரசர் ராஜேந்திர பாலன் கிடைத்துவிட்டார்...! தேவியே அவரை நேரில் கொண்டு சேர்த்து விட்டிருக்கிறதென்று தான் ஊர் உலகம் பேசியது!

"ராஜேந்திர பாலா..."

"தந்தையே..."

தந்தையும் தனயனும் ஆரத் தழுவிக்கொண்டார்கள்; ஆனந்தக் கண்ணீர் வடித்துக் கொண்டார்கள்.

விருந்து தொடங்கியது. மந்திரி பிரதானிகள், ராஜப் பிரமுகர்கள். அயல்தேசத் தூதர்கள் அனைவரும் கூடியிருந்தனர்.

மன்னர்பிரானும் இளவரசரும் இனிப்புப் பதார்த்தத்தைச் சுவைத்தார்கள்; சிரித்துக் கொண்டார்கள்.

அப்போது—

"மன்னர் மன்னரே! ஈழத்திலிருந்து ராஜ தூதன் ஒருவன் வந்திருக்கிறான், ஓர் இளைஞனையும் அழைத்துக்கொண்டு. உங்கள் தரிசனம் வேண்டுகிறான்."

"வரச்சொல்! ஓடு!"

தூதன் வந்தான்; கூட இளைஞனும் வந்தான்!

"வேந்தே! ஈழத்து மன்னன் பராக்கிரமசீலன் இவ்விளைஞனைத் தங்களிடம் சேர்ப்பிக்கச் சொல்லியுள்ளார்கள். இவர் தங்கள் திருக்குமாரர் என்பதை நேற்றுத்தான் அரசர் அறிய முடிந்தது. பல ஆண்டுகளுக்குமுன் தங்கள் நாட்டில் கடந்த

இந்திர விழாவில் உங்கள் மைந்தன் காணாமல் போய் கடல் கடந்து களவாடிச் சென்ற கொள்ளைக் கூட்டத்தில் அகப்பட்டான்: அதிலிருந்து சுயநினை வின்றி இருந்த இளவரசர், சென்ற மாதம் ஈழத்து மண்ணுக்குத் தப்பி வந்திருக்கின்றார். அப்போது தாங்கள் உலகிற்கு அனுப்பிய செய்தி—இள வரசைக் கண்டுபிடிக்க வேண்டி விடுத்த வேண்டு கோள் கேட்டு, புத்தித் தெளிவு பெற்று உதவி கோரி எம் மன்னரிடம் அண்டினார்...'' வேந்தே! இதோ உங்கள் இளவரசர்...'' என்று சொல்லிய ராஜ தூதன், அப்புதிய இளைஞனை, அரசரின் கரங்களில் ஒப்புவித்தான்.

"தேவி பராசக்தி! என்ன சோதனை இதெல் லாம்!...இவர்கள் இரண்டு பேரில் யார் என் மகன்? இருவரும் ஒரே வடிவாகத் தோன்றுகின்றார் களே...! நெற்றி வடு இவனுக்கும்கூட அமைந் திருக்கிறதே..யார் என்னுடைய உண்மை மைந்தன் தாயே...? என்று வேண்டினார். வேந்தன்.

திடுதிப்பென்று உள்ளே ஓடினார்: திரும்பிவந்த சமயம் அவர் கையில் 'பராசக்தியின் மந்திரவாள் பளிச்சிட்டது!

"இளைஞர்களே, உங்கள் இருவரில் யார் இந்த மந்திரவாளை ஒழுங்காகப் பிரயோகித்து, அதன் ரகசியத்தை வெளிப்படுத்துகிறீர்களோ, அவனே என் குலக்கொழுந்து என்று ஒப்புக் கொள்வேன். இந்த ரகசியம் எங்கள் வழித்தோன்ற லுக்கே தெரியும்...''

தனித்தனியே இளைஞர்கள் இருவரும் வாள் பரிசோதனைக்கு இலக்காகினர். என்ன ஆச்சரியம்! இருவருமே அல்லவா வெற்றி பெற்றுவிட்டிருக்கிறார்கள்! 'பராசக்தி துணை!' என்ற எழுத்துக்களை எவ்வளவு லாகவமாக வாள் முனையில் அடுக்கி விட்டார்கள்...!

மன்னர் மன்னன் தேவி பராசக்தியின் படத்தின் முன் மண்டியிட்டு அழுதார். "பராசக்தி! இவ்விருவரில் யார் என் உண்மை மகன்?...சொல், இல்லையேல் என் உயிரை எடுத்துக் கொள்..."

"அப்பா..." என்று புதிய இளைஞன் ஓடினான்

"வேந்தே" என்று இளவரசக் கோலத்தில் இருந்த இளைஞன் ஓடினான்.

"வேந்தே! உங்கள் உண்மை மைந்தன் இதோ இவரேதான்...! உங்கள் பணியாள் ரவிசேகரனை அறிவீர்களல்லவா? அவனேதான் இந்த ஏழை. அன்று கிழவன்போல வந்து உங்கள் வேலைக்காரனாகி, பிறகு உங்கள் திருக்குமாரின் ஓவியத்தைத் தீட்டி, பிறகு உங்கள் மைந்தன் என்று போலிவேஷம் புனைந்ததெல்லாம் இதே அடிமைதான் பிரபோ! உங்கள் மைந்தனின் உருப் போல அசலாக என் தோற்றமும் அமைந்திருப்பதை அறிந்தேன். படைப்புப் புதிர் இது! என் உண்மைத் தோற்றத்தினால் ஏதாகிலும் விபரீதம் விளையக் கூடும் என்று கருதியே, முதலில் கிழவனாக மாறு

வேஷம் பூண்டேன். பிறகு உங்கள் மகனை உடனடியாகக் காணாவிட்டால் உங்கள் உயிருக்கே ஆபத்து என்ற நிலை ஏற்படவே, இன்று இப்படி உங்கள் மகனாக நாடகம் போட்டேன். அதன் மூலமாகிலும் நான் என் அரசரை—தங்களை உயிர் பெற்றெழச் செய்துவிடலாம் என்ற நப்பாசைதான் காரணம். சோதனை நடத்தினீர்கள். மந்திரவாள் ரகசியத்தை நீங்கள் தானே எனக்குச் சொன்னீர்கள் வேந்தே! பராசக்தி, உங்கள் மைந்தனை—எங்கள் இளவரசரைக் கொணர்ந்து விட்டிருக்கிறார். பிரபுவே! என் தவறை மன்னியுங்கள். நான் விடைபெற்றுக் கொள்கிறேன்...'' என்று மண்டியிட்டு வணங்கினான் ரவிசேகரன், மன்னர் மன்னன் முன்னிலையில்.

''ரவிசேகர்! உன் ராஜ அபிமானத்தைப் போற்றுகிறோம். இதோ, எங்கள் குலவிளக்கான தேவி பராசக்தியின் வாளை உனக்குப் பரிசாக அளிக்கிறோம். இனி நீதான் என் மைந்தனின் அந்தரங்க உயிர்த் தோழன்...!'' ஆனந்தக் கண்ணீருடன் கூறினான் வேந்தன்.

இளவரசர் ராஜேந்திரபாலன் ரவிசேகரனைத் தழுவியவாறு நன்றி தெரிவித்துக் கொண்டார்!

# தாஷ்கண்ட் வீடு

அறந்தாங்கி அன்றைக்குத் திருவிழாக் கோலம் பூண்டிருந்தது.

தியாகி சிவசிதம்பரம் அவர்களின் பங்களா வுக்கு அன்றுதான் கிரகப்பிரவேசம். அதனால்தான், அவ்வூரின் அழகே தனிப்பட்ட மகிமையுடன் விளங்கிக்கொண்டிருந்தது.

திருவாளர் சிவசிதம்பரம் ஐந்து ஏக்கர் தியாகி யல்ல; உண்மையிலேயே தியாகம் செய்த குடும்பத் தில் உதித்தவர். நாட்டின் விடுதலைக்கென அப் பகுதியில் நடைபெற்ற கிளர்ச்சியின் போது, அவர் சரியாக மூன்றரைமாதக் கடுங்காவல் தண்டனை அனுபவித்தார்.

*"தாயின் மணிக்கொடி பாரீர்! அதைத்*
*தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!"*

பாரதியின் இப்பாடல் வரிகளைச், சிவசிதம்பரம் பாடக் கேட்டுப்பயந்து விட்டானாம் வெள்ளைக் காரக் கலெக்டர் வின்ஸ்டன்.

நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம் அது
நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம்!

இந்தவரிகளை—அதன் உண்மைப் பொருளை அறிந்துகொள்ள—அதாவது; வெள்ளைக் காரர்கள் அறிந்துகொள்ள உதவியவர்களில் சிவசிதம்பரமும் ஒருவராம். அதவாது, அவரது பாட்டுத் திறத்தினால் தான் வெள்ளையன் வெளியேறவே திட்டமிட்டிருக்க வேண்டும் என்றும் பலர் அவரைப் புகழ்வதும் உண்டு. அப்படிப்பட்ட உணர்ச்சிப் பிழம்பு அவர்!

உழைப்பால் உயர்ந்தவர் சிவசிதம்பரம்.

காந்தியடிகளின் அறமும் நேருஜியின் துணிவும் கைவரப்பெற்றவர். பாரதநாட்டுத் தலைவர்கள் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்த நேரங்களில் எல்லாம் தவறாமல் அவ்வவ்விடங்களுக்குச் சென்று, தலைவர்களையெல்லாம் சந்தித்து அவர்களுடைய அன்பையும் ஆசியையும் பெற்றவர் அவர்.

சுதந்திர விழாக்களுக்கு அவரது பெருநிதி தான் கை கொடுத்துதவியது.

தன்னலம் கருதாப்பணியால் உலகின் கண் உயர்ந்து நின்ற தமிழ்ப் பெருந்தலைவர் காமராஜரை அவ்வூருக்கு வரவழைத்து விழாக் கொண்டாடத் திட்டம் வகுத்திருந்தார் அவர். அப்பொழுதே, தமது பெருமனையின் குடிபுகு விழாவையும் நடத்திவிட

வேண்டுமென்றும் கருதியிருந்தார். ஆனால் தாய் நாட்டுப்பணியில் அல்லும்பகலும் உழைத்துவரும் பெருந்தலைவரை இம்மாதிரியான சொந்தக்காரியங்களுக்குப் பயன்படுத்துவது சரியல்ல என்றும் கருதி, தம்முடைய மேற்கண்ட ஆசையை அடக்கிக் கொண்டார். இந்தத் தேர்தல் முடிந்ததும், தலைவரை அவ்வூருக்கு வரவழைக்க வேண்டும் எனவும் தீர்மானம் செய்து கொண்டார்.

தேர்தல் என்றால் அந்தப் பக்கமே தலை வைத்துப் படுக்கமாட்டார் சிவசிதம்பரம். தேர்தலில் குதிக்கவேண்டுமென்று அவரைப் பலர் பல தருணங்களில் தூண்டுவார்கள்.

அப்போதெல்லாம் "தேர்தல்தான் இந்த ஜன நாயகயுகத்தில் சுயநலத்தைத் தூண்டும் மோகினி!" என்று துணிகரமான உண்மையைச் சொல்லிவிடத் தயங்காதவர் அவர்.

முன் ஒருதினம்; அப்பகுதியில் வினோபாஜி பாதயாத்திரை செய்தார். அவரிடம் தமது அன்பளிப்பாக ஓர் ஏக்கர் நஞ்சைநிலத்தை அர்ப்பணம் செய்தார் சிவசிதம்பரம்.

அவரது ஈகையின் உதவியால் படித்து முன்னேறிய ஏழைப்பிள்ளைகள் அநேகர்.

அன்னாரது தர்மங்களால் தழைத்த நிறுவனங்களும் பலவுண்டு.

தியாகி சிவசிதம்பரம் அந்தப் பங்களாவையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்போது, சில தினங்களுக்கு முன்னதாக நடந்த சம்பவம் ஒன்று அவர் நினைவில் எழுந்தது.

பழைய இல்லத்தில் உட்கார்ந்து பெண்டு பிள்ளைகளுடன் சாப்பிட்டுக் கொண்டிருந்த நேரம் அது.

சிவசிதம்பரத்துக்கு நான்கு பிள்ளைகள்.

தசரத மகாராஜாவுக்கு இருந்தார்களல்லவா அப்படி!

மூத்தவன்: காமராஜ்

இரண்டாமவன்: மோகன்தாஸ்.

மூன்றாமவன்: நேரு.

நான்காமவன்: குமரன்.

அவர்கள் நால்வருடனும் மனையாட்டி நாகம்மையுடனும் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் "பங்களாவுக்குப் பெயர் என்ன வைக்கலாம்?" என்று ஒரு கேள்வியைப்போட்டார் அவர். கேள்வி கேட்டுவிட்டு, அவர் தன்பாட்டில், அன்றையப் பத்திரிகையில் மூழ்கலானார். அப்போது, பிரதமர் லால்பகதூர்சாஸ்திரி தாஷ்கண்டிலிருந்து வந்தார். பாரதத்தின் சீலத்தை உயர்த்த அறவழித் தூது மேற்கொண்டு அதன் விளைபலனாக பாகிஸ்தான்

அதிபருடன் சமாதான ஒப்பந்தம் செய்துகொள்ளும் கட்டத்தில் இருந்தார் லால்பகதூர் அவர்கள். தாஷ்கண்ட் வீரராகத் திகழப்போகும் தியாக சீலரின் தன்னலம் துறந்த வாழ்வைப்பற்றி எண்ணியவாறு இருந்தார்.

பெருமனைக்கு வைக்கப் படவேண்டிய பெயர்களை அவரவர்கள் தங்கள் போக்குப்படி பிரஸ்தாபித்தார்கள்.

காமராஜுக்குக் காங்கிரஸ்தான் உயிர்; தாய் தந்தையரைப் போலவே! ஆகவே அவன் தன் இஷ்டப்படி, 'காந்தி இல்லம்' என்று பெயர் சூட்ட விழைந்தான்.

மோகன்தாஸுக்கு பெரியார் தான் ஜீவன் அந்தப் போக்கில் அவன் தன்னுடைய கருத்தைச் சொன்னான்.

நேருவுக்கு அண்ணாத்துரை தான் குரு அவன் அந்தப்படியில் நின்று பெயரை வெளிப்படுத்தினான்.

கடைக்குட்டிக்கு ஜீவாதான் குறி. அவன் விருப்பப் பிரகாரம் பெயரை உரைத்தான்.

இந்தப் பிள்ளைகளின் ஆவல்களைப் பற்றிச் சிவசிதம்பரம் தம் மனையாட்டியுடன் உரையாடிக் கொண்டிருந்தார். பிள்ளைகளின் சொந்தக்கருத்துகளில் குறுக்கிட விரும்பாதவர் அவர். ஆனாலும்,

அவரவர்களுக்கு உரிய பருவம் வரும் வரை, அரசியல் பற்றி அக்கறை காட்டக்கூடாது என்றே ஆணை பிறப்பித்திருந்தார் அவர். இல்லையென்றால் பிள்ளைகளின் படிப்பு கெட்டு விடாதா, என்ன?

தன்னைப்பெற்று வளர்த்த தாய் தந்தையரின் நினைவைப் போற்றும் வகையில் தமது புது மனைக்கு "மங்களம் குமரன் வீடு" என்று பெயர் சூட்ட வேண்டுமென்று முடிவிட்டவண்ணம் இராப் பொழுதைக் கழித்தார், சிவசிதம்பரம்.

ஆனால், விடிந்த பொழுது லால்பகதூரின் உயிரையன்றோ கொள்ளை கொண்டது! தாய்த் திருநாட்டின் சீலம் பேண, தாஷ்கண்ட் பயணப் பட்ட மாமேதை, தாயகம் திரும்பாமலே தன் பணிக்கு ஒரு முத்திரை பதித்துக் கொண்ட இடம் தாஷ்கண்ட் அல்லவா? சாஸ்திரியின் அமர நினைவுக்கு ஒரு சின்னமென அமைந்து விட்டதே தாஷ்கண்ட்!

உடலும் உள்ளமும் சோர்ந்து விழ, சாஸ்திரியின் அமர நினைவுக்கு அஞ்சலி செலுத்திவிட்டு, புதுப்பொலிவுடன் திகழ்ந்த தமது பங்களாவை நோட்டமிட்டார் சிவசிதம்பரம்.

"ஆம்; இம்மனை அமரர் சாஸ்திரியின் நினைவுக்கு—அவரது தாஷ்கண்ட் சமாதான யாத்

திரைக்கு ஒரு நினைவுச் சின்னம். ஆகவே, இம் மனைக்கு 'தாஷ்கண்ட் வீடு' என்றே பெயர் சூட்ட வேண்டும்!'' என்று தீர்மானித்தார்.

பெண்டு பிள்ளைகள் ஏக மனதாகவும், ஒருமைப் பட்ட ஐக்கியத்துடனும் தந்தையின் முடிவை ஆமோதித்தனர்.

மழை விடாமல் பெய்தது!

புதுமனை புகுவிழா ஆரம்பமானது.

''தாஷ்கண்ட் வீடு'' என்னும் எழுத்துகள் துலாம்பரமாகப் பளிச்சிட்டு மின்னிக் கொண்டிருந்தன.

ஏழை எளியவர்களுக்கு அளித்த அன்னதான நிகழ்ச்சியுடன் விழா ஆரம்பமானது; புனிதச் சடங் குடன் தொடர்ந்தது; விருந்தும் முடிந்தது.

சிவசிதம்பரம் தம்பதியும் பிள்ளைகளும் பால் காய்ச்சிக் குடித்து, விருந்து உண்டு மகிழ்ந்தார்கள்.

விழா முடிந்து சிறுபொழுதாகி யிருக்கும்.

பள்ளி சென்ற கடைக்குட்டிப் பையன் ஓடோடி வந்தான். ''அப்பா, அப்பா! எங்க ஸ்கூல் திடுதிப் பென்று இடிந்து விழுந்து விட்டது. நல்லவேளை, யாருக்கும் சேதமில்லை, ஆனால், நாளைக்கு ஸ்கூல் நடத்துவதற்குத்தான் இடமில்லை!'' என்று வருத்தத்துடன் தெரிவித்தான்,

பல்வேறு கட்சித் தலைவர்களிடமிருந்தும் வந்திருந்த வாழ்த்துச் செய்திகளை மனைவியிடம் கொடுத்துவிட்டு, சிவசிதம்பரம் கதர்த்துண்டு காற்றில் பறக்க, வேகமாக விரைந்தார். அடுத்த பதினைந்தாவது நிமிஷம் அவர் தமது புது மனைக்குத் திரும்பினார். தம் அருமைத் துணைவியிடம், "நாகம்மை! புறப்படு. பிள்ளைகளையும் அழைத்துக் கொள். நமது பழைய வீடுதான் இனி நமக்குச் சதம். இந்தத் 'தாஷ்கண்ட் வீடு' தான் இனி இவ்வூர் "காந்தி உயர்நிலைப்பள்ளி!"... பள்ளிப் பிள்ளைகளுக்கு ஆபத்துக்கு உதவும் பேற்றை நமது வீடு அடைந்திருக்கிறது. அதற்காக நாம் எவ்வளவோ பெருமைப்பட வேண்டும்!" என்று உணர்ச்சிப் பெருக்கின் விம்மிதத்துடன் மொழிந்தார், சிவசிதம்பரம் அவர்கள்.

"தியாகி சிவசிதம்பரம் அவர்களுக்கு ஜே!" என்றகோஷங்கள் விண்முட்ட எழத்தொடங்கின.

# கருநெல்லிக்கனி

மாரிபோல் வாரி வழங்கும் வள்ளலாம் அதியமான் நெடுமான் அஞ்சி அன்று அடைந்த அகமகிழ்வுக்கு ஓர் எல்லையே இல்லை, என்றும் போலவே அன்றும் வேட்டையாடித் திரும்பினான்; அரண்மனைக்குத் திரும்பிய அவன் மனம் அக்கணம் அளப்பரிய ஆனந்தத்தில் திளைத்துக் கொண்டிருந்தது. எந்த ஒரு செயலுக்கும் ஏதோ ஒரு காரணம் இருக்கத்தானே வேண்டும்?

ஆம்; அப்பொழுது அரசனின் மனமகிழ்ச்சிக்கும் ஒரு காரணம் இருக்கத்தான் செய்தது.

அக்காரணத்தின் பிரத்தியட்ச நிரூபணமாக அப்பொழுது அவனுடைய உள்ளங்கையில் அழகு கனிந்த கரு நெல்லிக்கனி ஒன்று காட்சியளித்துக் கொண்டிருந்தது. அதைப் பார்க்கப் பார்க்க அவன் நெஞ்சம் ஆனந்தக் கடலாடிக் கொண்டிருந்தது.

அக் கனியின் சிறப்பினை அறிந்துணர்ந்தவன் அவன். வேட்டைக்குச் சென்றவிடத்தில் ஒரு

மலையுச்சியில் அக் கனி இருக்கக் கண்டான். பெறுதற்கரிய—ஆனால் பெற்றாலும் கிட்டுதற்கரிய அத்துணைச் சிறப்புப் பெற்ற அந்த நெல்லிக் கனியின் அருமை பெருமைகளைக் கேள்விப்பட்ட அவன், கையில் விளங்கிய கனியுடன் மேற்படி கனியினைப் பற்றித் தான் கேட்டுணர்ந்த விவரங் களை யெல்லாம் நினைவு கூர்ந்தவாறு இருந்தான்.

அக்கனியின் சிறப்பும் மகிமையும் என்ன வென்று தெரியுமா?

உண்டாரைப் பிணியின்றி, நெடுங்காலம் வாழச் செய்யும் பெற்றி கொண்டது அக்கனி.

இத்துணை பெருமை கொண்ட அக் கனியை அவன் யாதொரு விக்கினமும் இன்றிப் பறித்து மீண்டான். அதுவே அவனது பெரும் வெற்றி தானே!—அத்தகைய வெற்றிக்குச் சின்னம் போலத் தோன்றிக்கொண்டே யிருந்தது அந்நெல்லிக்கனி.

“இக்கனியை என்ன செய்வது?” என்ற ஒரு விசித்திரக் கேள்வியை அவன் தன்னுள் எழுப்பிக் கொண்டான். உரிய விடையையும் அவனது வள்ளல் உள்ளம் சொல்லிக் காட்டியது. அவ் விடை ஈந்த அளவில்லாத ஆனந்தத்தின் திளைப் பில் அரண்மனையில் வந்திறங்கினான். வேட்டை யாடிய களைப்பைப் போக்கக் கூட அவனுக்கு எண்ணமில்லை.

நெல்லிக்கனியையே இமைபாவாமல் பார்த்தது பார்த்தபடி இருந்தான் அஞ்சி. அவனது தமிழ் மனம் அப்பரிசைக் கொடுப்பதற்குத் தக்க ஜீவனைக் கணித்து விட்டது. அக்கணிப்பின் பலன் நல்ல படியாகவே அமைய வேண்டுமேயென அவன் தமிழ்க் கடவுளைத் தொழுதான்.

பின்னர் தன் சேவகனை அழைத்தான். அதியமான் தன் வேண்டுகோளின்படி தன் அரண்மனை அவைப்புலவராகப் பணி இயற்றி தன் அரசிருக்கையான தகடூரின் பெருமையை எட்டுக் கண் விட்டெரியச் செய்து வந்த தமிழ் மூதாட்டியான ஒளவைப்பிராட்டியைத் தக்க மரியாதைகளுடன் அழைத்து வரச் செய்தான்.

கால் நாழிப் பொழுது கால் எட்டி நடந்தது.

"தமிழ்ப்பாட்டி ஊன்றுகோலும் கையுமாக—தமிழ்மணமும் செவ்வாயுமாக—வந்தாள். தமிழ் வளர்த்த தகைமையாளனாம் அதியமான் நெடுமான் அஞ்சியை வணங்கி வாழ்த்தி இருக்கையில் அமர்ந்தாள்.

தமிழமுதூட்டும் தாயே! தமிழை வரையாது வழங்கும் வள்ளலான உங்களுக்கு அடியேன் ஒரு பரிசைக் கொடுக்கவே அவ்வளவு அவசரமாகத் தங்களை அழைத்து வரச் செய்தேன்!" என்றான் அரசன்,

நிலவுக் கதிர்கள் அத்தாணி மண்டபத்தில் அழகுறத் தவழ்ந்து விளையாடின.

"நீயோ வள்ளல்; தமிழுக்குக்கிட்டிய பெரு வள்ளல். அத்தகைய வள்ளலான நீ என்னையே வள்ளலாக ஆக்கிவிட்டாயே, அதுவே நீ எனக்கருளிய ஓர் உயர்ந்த பரிசுதானே?—இதைவிட ஓர் உயர்ந்த பரிசாக இனி நீ என்ன எனக்குக் கொடுக்க வேண்டும்?" என்றாள் தமிழ்ப் பிராட்டி; உணர்ச்சிவசப்பட்டுப் பேசினாள்அவள். கோலூன்றிய கை தளர்ந்தது. ஆனால் தமிழ் ஊறிய நா தழைத்தது!

ஒளவையின் நன்றியறிவை உள்ளுறப் புகழ்ந்த வண்ணம், மறைத்து வைத்திருந்த அக் கருநெல்லிக்கனியினை அவளிடம் கொடுத்தான். "இதுதான் என்னுடைய பரிசில். சுவைமிக்க கனி இது. வேட்டைக்குச் சென்ற வழியில் கிட்டியது. அதை உங்கட்குக் கொடுக்கவே அழைத்தேன்!"

"நீ புசிக்க வில்லையா?"

"ஒன்றினை நான் ஏற்கெனவே புசித்திட்டேன் தாயே!"

"இவ்வளவு அருமையுடன் கொண்டிருந்த இக்கனியை நான் உண்ண விரும்பும் உனது

ஆவலை ஈடேற்றுவது என் கடமையன்றோ!" என்று சொல்லி அக்கனியைக் கனிவுடன் புசித்தாள் ஔவை மூதாட்டி.

அக்கனியினை உண்டு முடித்த பின்னரே, அக் கனியின் ஈடு இணையற்ற சீரும் சிறப்பும் பற்றிச் சொன்னாள் அஞ்சி மன்னன்.

"ஆகா! இவ்வளவு சிறப்புப் பெற்ற கனி ஒன்றை நீயும் உண்டதனால் தமிழ் வளர்க்கும் வள்ளலுக்கு நீண்ட ஆயுளும் கைகூடி வந்து விட்டது. இந்நிலை கண்டு என் உள்ளம் எவ்வளவு குதூகலம் எய்துகிறது, தெரியுமா? வேந்தே! உன் கொடைச் சிறப்பு பெரிது; உனக்குத் தமிழ்பால் உள்ள பாசம் பெரியது!" என்றாள் பாட்டி, அக்கனி உண்டதன் விளைவாக தன்னுள் ஏற்பட்டிருந்த மகத்தான மாறுதலை—உள்பலத்தை அவள் அறிந் தாள்

"ஆஹா! எத்துணை சிறப்புக் கொண்டதாக இருக்கின்றது நீ அளித்த இந்நெல்லி! வெகு அற்புதம்!...நீயும் ஒரு கனியைப் புசித்தனையே!— என் உள்ளத்திடை ஏற்பட்ட மாறுதலை எப்படி உணர்கின்றாய் நீ?...இக்கனிகள் இன்னும் சில கிட்டுமா? உன் அவைப் புலவர் ஏனையோர்கட்கும் கொடுக்கலாமல்லவா?" என்றாள் ஔவை.

அதியமான் நெடுமான் அஞ்சி விநயத்தோடு சிரித்தான். "தாயே! உங்கள் உள்ளன்பு மகத்

தானது; மாண்பு பூண்டது! ஆனால் இக்கனி பெறற்கரிய கனியாகும்! ஒரே ஒரு கனிதான் இவ்வகையில் உண்டு! அதுவே தாங்கள் உண்ட கருநெல்லிக்கனி!...'' என்று சொன்னான் அரசன்.

அதைக் கேட்டதும் ஔவைப் பிராட்டி மெய் சிலிர்த்தார். "அப்படியென்றால், நீ அதைப் புசிக்கவில்லையா? தமிழ் வளர்க்கும் வள்ளலான நீ அல்லவா அதை உண்டிருக்க வேண்டும்! அது வன்றோ சால்புடையதாகவும் அமைந்திருக்கும்! உண்மையைச் சொன்னால், நான் அதைப் புசித்திடேன் என்றா பொய் புனைந்தாய்? மன்னவனே! தமிழ் வாழ நீ வாழ்வதன்றோ நீதி?'' என்று மெய்யுருகினாள் ஔவை.

"தமிழன்னையே! இக்கனியினைத் தாங்கள் புசித்ததே ஏற்றமுடைய செயலாகும். தமிழும் தமிழ் மண்ணும் செழிக்க உழைத்திடும் திறன் பெற்ற தாங்கள் நீடு வாழ்வதே தர்மமாகும். நான் சாதாரண மானுடன். என்னால் இப்புவிக்கு யாது பயன்? ஆகவே, தகுதி பார்த்தே உரிமைப் பரிசு சேர்ந்திருக்கின்றது!'' என்றான் அஞ்சி.

அரசனின் அற்புதச் செய்கையைக் கண்டு ஔவை "வீரக்கழலை உடைய அஞ்சி மன்னவா! நான் வாழ, கருநெல்லிப் பழத்தை எனக்கு ஈந்த வள்ளலே! உன் ஈகைப் பண்பு பெரிது, பெரிது!... இறப்பதற்குக் காரணமான விஷத்தை உண்டும்

சிவபிரான் சாகாமல் நிலைபெற்றிருந்தாற்போல, நீயும் நிலைபெற்று வாழ்வாயாக!...'' என்று வாழ்த்தினாள்.

''தமிழ்த் தெய்வமே! நெல்லிக்கனியை உண்ணாமலேயே, நான் சாவை வென்றவனாகி விட்டேனே, தங்களது அமுதப் பாடல் மூலம்! இந்த ஒரு பாக்கியத்தைப்பெற நான் என்ன தவம் செய்தேனோ? ஆஹா, உங்களது கருணையே கருணை!'' என்று உணர்ச்சி வசப்பட்டான் அதியமான்.

ஆம்; அதியமான் நெடுமான் அஞ்சியும் ஔவைப் பிராட்டியைப் போன்று தமிழ் இலக்கியத்தில் என்றென்றும் நிலைபெற்று விட்டவனே அல்லவா?

# “கா!...கா!...கா!...”

அது ஒரு பெரிய காடு. காட்டுக்கு உரிய சகல லட்சணங்களும் ஒருங்கே நிரம்பப் பெற்ற இடம் அது. விலங்குகளுக்குப் புகல் அளித்த விருட்சங்களுக்குப் பஞ்சமில்லை. அங்கங்கே நீர் நிலைகளும் இருந்தன.

அந்தக் காட்டுக்கு அதன் பாரம்பரிய வழக்கப்படி அதிபதியாக இருந்தது சிங்கம் ஒன்று. அது மாரடைப்பால் திடீரென்று இறந்துவிட்டது. அது தனக்குப்பின் வாரிசு எதையும் விட்டுச் செல்லவில்லை. ஆகையால், அந்தச் சிங்கராஜாவுக்கு ஏற்ற மதியூக மந்திரியாக இருந்த நரியே இப்போது அந்த ஆரண்யத்தை அரசாண்டது. ஆட்சி என்றால் ரொம்பவும் கெடுபிடி. அசல் நரிதர்பார் தான்!

அன்றைய தினம் நரி முடிசூட்டிக்கொண்ட திருநாள் நடந்தது. நரியார் தன் இஷ்டப்படி தலையை ஆட்டும் விலங்குகளையே தனது ஐம்பெருங் குழுவில் சேர்த்துக் கொண்டது. விழாவுக்கு சகல

ஜீவராசிகளும் வருகை தந்தன. மனிதர்கள் வாழும் இடங்களுக்கும் ஓலைகள் அனுப்ப ஏற்பாடு செய்யும்படி ஆணை இட்டது நரி ராஜா. ஆனால் ஏனோ மனிதர்களில் ஒருவர்கூட முடிசூட்டு வைபவத்துக்கு வரவில்லை.

இதை அறிந்த நரியார் மனிதர்களின் இத்தகைய அவமரியாதை நடப்புக்கு விளக்கம் கோரி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தனது அந்தரங்கக் காரியதரிசியான நாயிடம் தெரிவித்தது. அது சாமான்யமான நாயல்ல; துப்பறியும் நாய் ஜாதி!

முடிசூட்டும் வைபவம் நடந்தது. நரியாருக்குத் தலையில் கிரீடம் சூட்டப்பட்டபோது எல்லாக் குடிபடைகளும் பலத்த ஆரவாரத்துடன் கை தட்டின. ஆனால் ஒருவரிசையில் இருந்த காக்கைக் கூட்டம் மாத்திரம் கை தட்டவில்லை. அக் காக்கையின் பிரதிநிதி வெகு ஆணவமாக சபையின் மேல் மாடப் பொந்தொன்றில் வீற்றிருந்தது. இதைக் கண்ட நரி ஆத்திரம் அடைந்தது. அதன் பற்கள் துடித்தன. தந்திர மூளை மிகவும் ஆத்திரப்பட்டது. ஆனாலும், விழாவில் ரசாபாசம் எதுவும் நிகழக் கூடாது என்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தது நரி. காரணம் இதுதான் புரட்சி நடத்தி, ஜனநாயக ஆட்சியை மனிதர்கள் உலகினைப்போல நடத்தத் தொடங்கிவிடும் வனவிலங்குகள் என்ற பயம் அதற்கு உள்ளூற இருந்தது!

ஒருநாள், ராஜா நரியார் வேட்டைக்குச் சென்றது. நல்ல 'தேட்டை' கிடைத்தது. புசித்தது போக, மிகுதியைச் சுமந்து கொண்டு தன் அரண்மனைக்குத் திரும்பியது.

அப்போது வழியில் அது காக்கைப் பிரதிநிதியைச் சந்தித்தது. காக்கை முறுக்கு ஒன்றை வாயில் கவ்விக் கொண்டிருந்தது. காகத்தை அவமானப் படுத்தி ஏமாற்ற எண்ணமிட்டது. காகம் தனக்கு வணக்கம் சொல்லாதது கண்டு மேலும் சினம் கொண்டது நரி. ஆனாலும் நரியல்லவா அது? அந்தச் சினத்தை அடக்கிக் கொண்டது. காகத்தை ஏமாற்றிய தன் மூதாதையரின் கதையை மீண்டும் நினைவூட்டிக் கொண்டபடி, "காக்கையாரே! காக்கையாரே! சுகமா?" என்று குசலம் விசாரித்தது.

என்ன ஆச்சரியம்!

காக்கை பதில் எதுவும் சொல்லவில்லை.

ராஜாவான நரியின் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை காக்கை!

காக்கைமீது கொண்ட ஆத்திரம் இன்னும் கூடுதல் ஆனது. ஆனாலும் வெளியே காட்டிக் கொள்ளவில்லை. நயமான பாவனையுடன், "காக்கையாரே! ஒரு பாட்டுப் பாடுங்கள்!" என்று கேட்டுக் கொண்டது நரி.

என்ன ஆச்சரியம்!

இப்போது காகம் பாடத் தொடங்கியது. பந்து வராளிராகப்பாட்டு அது.

பாவம் நரியின் முகத்தில் ராஜகளைக்குப் பதிலாக அசட்டுக்களை வழிந்தது. அது கோட்டை கட்டினமாதிரி, காக்கை வைத்திருந்த முறுக்கு கீழே விழவில்லை. அந்த முறுக்கைக் கிளையில் செருகி வைத்து விட்டுத்தான் அது பாடத் தொடங்கியது! "பாவம், நரியார் ஏமாந்து விட்டார். இல்லையா ராஜா நரியாரே!" என்று நையாண்டி செய்தது, காக்கை.

நரி உறுமியது. "வா உன்னை ஒரு கை பார்க்கிறேன்!" என்று ஊளையிட்டது.

"இப்போது நீ ஏமாந்தாயல்லவா? இந்தச் சம்பவத்தை மறுபடியும் ஞாபகப்படுத்திக்கொள். அப்புறம் என்னை ஒரு கை பார்க்கலாம். ஒரு முறை ஏமாந்து விட்டால், எப்போதுமே ஏமாந்து கொண்டேயிருக்க வேண்டுமென்று சட்டமா, என்ன? உன் ஜம்பத்திற்கு நான் ஆளில்லை!" என்று நிதானம் கெடாமல் எச்சரித்தது காக்கை.

காக்கை மீதிருந்த கடுங்கோபத்தை தான் கொணர்ந்திருந்த மீதமிருந்த இறைச்சியின் மீது காட்டியது நரி.

காக்கை கைகொட்டிச் சிரித்தது.

நரி அடங்காக் கோபத்துடன் காகத்தை அண்ணாந்து நோக்கிற்று.

மீண்டும் நகைத்தது காக்கை பின்னர், "கா கா, கா!" என்று கூவியது.

அவ்வளவுதான்: காக்கைக் கும்பல் கூடி விட்டது. எல்லோரும் அந்த முறுக்கைப் பகிர்ந்து உண்டன.

"நரியாரே! பார்த்தாயா எங்கள் பண்பாட்டினை?...கூடி உண்டு வாழ்வதுதான் எங்கள் குல வழக்கம். உன்னைப் போலத் தனித்திருந்து புசிப்பது எங்களுக்கு நாகரிகமாகப்படுவது கிடையாது! உலகம் அறியாதவன் நீ! ஆனால் எங்களை அறிந்தது இவ்வுலகம்!...அதனால்தான், 'காக்கை குருவி எங்கள் ஜாதி!' என்று அமரகவி பாடிச் சென்றிருக்கிறான்!" என்று பெருமையோடு பேசியது காக்கை.

காக்கைக் கூட்டம் கைகொட்டிச் சிரித்தது!

இனியும் அங்கு நிற்க, மாட்சிமை தங்கிய அந்த நரி ராஜாவுக்குப் பைத்தியமா பிடித்திருக்கின்றது?

# இதோ, காந்தி ராஜ்யம்

காந்திராமன் காளியம்மன் கோயிலுக்குப் போய்த் தரிசனம் செய்து விட்டு வேகமாகத் தன்னுடைய வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தான்!— வழியில், அன்னை இந்திரா சதுக்கத்தில் பூவை மாநகர்க் கிராமத்து மக்கள் கூடியிருந்ததைக் கண்டதும், பதற்றத்தோடு ஒருகணம் நின்றான்!— வீட்டுக்குப் போய்க் காலைப் பலகாரம் சாப்பிட்டு விட்டு பி. ஏ. வகுப்பில் கல்லூரியில் சேருவதற்காகப் புதுக்கோட்டைக்குப் புறப்பட வேண்டும்!— அப்பாவும் அம்மாவும் அங்கே காத்திருப்பார்கள்!— கூட்டத்தை நிதானமாகவே ஊடுருவினான் காந்திராமன்.

நடுத்தர வயதுடன் கதர் உடைகள் பளிச்சிடக் கூட்டத்தின் மையத்தில் நின்று கொண்டிருந்த ஆசிரியர் ஆத்மநாதன் பேசிக் கொண்டிருந்தார்:

"அன்புச் சகோதரர்களே!— சகோதரிகளே! நம்முடைய அரசாங்கம் தீவிரமாகவே செயற்படுத்தி வருகிற வயதுவந்தோர் கல்வி வளர்ச்சிக்கான

திட்டத்தை உங்கள் மண்ணான இந்தப் பூவை மாநகர்க் கிராமத்திலும் நடைமுறைப் படுத்தவே நான் தற்போது அரசு முறையிலே இங்கே வருகை தந்திருக்கிறேன்! — உங்களிலே இதுவரையிலும் எழுத்தறிவு பெறாமல் இருக்கின்றவர்கள் எல் லோரும் இத் திட்டத்தில் பங்குகொண்டு நாட் டுக்கும் வீட்டுக்கும் செய்திடவேண்டிய கடமைப் பொறுப்பைச் சிறப்பாகச் செய்யும்படியும் அதன் விளைவாக அரசின் முதியோர் கல்வித் திட்டத்தை வெற்றியடையச் செய்யும்படியும் உங்கள் அனை வரையும் அன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்ளு கிறேன்!—இப்போது, இந்த வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் சேர விரும்புபவர்கள் தலை நிமிர்ந்து முன் வரலாம்!"

இவ்வாறு ஆசிரியர் ஆத்மநாதன் பேசி முடித்தார்.

கூட்டத்தில் சலசலப்பு பரபரப்புடன் எழுந்தது.

காந்திராமன் சுற்றிச் சூழ வெகு ஆவலோடும் ஆர்வத்தோடும் நோக்கினான்!— "வயது வந்தோர் நல்லறிவு பெறுவதற்கான அரசாங்கத்தின் பய னுள்ள இந்தத் திட்டத்திலே பங்குபெற என் னுடைய அப்பா கலந்து கொண்டால், எவ்வளவு சிறப்புடையதாக வாழ்க்கை அமையும்!—அப் பாவுக்கு, இந்த விவரம் தெரியுமோ, தெரியாதோ?—

புரியவில்லையே?—நான் புதுக்கோட்டைக்குப் புறப்பட்டுக் கல்லூரியில் சேர்ந்ததும் வீட்டுக்கு எழுதும் என்னுடைய கடிதத்தைப் பிறர் உதவி யில்லாமல், தாமாகவே அப்பா படித்தறியும் நல் வாய்ப்பு கிடைத்திட நல்வழி பிறந்துவிட்டால், என் இலட்சியக்கனவு பலித்துவிடும் அல்லவா?'— இவ்வாறு உரிமையோடும் உறவோடும் எண்ணி மகிழ்ந்த நிலையிலே, மீண்டும் கூட்டத்தைத் துழாவினான் காந்திராமன்.

அங்கே, காந்திராமனின் தந்தை ஆதியப்ப அம்பலத்தைக் காணவில்லை!

"பெரியவர்களே! காலம் பொன்னானது!— ஆகவே, இந்த முதியோர் கல்வி வளர்ச்சித் திட்டத் தில் சேர்ந்து உண்மையாகவே வாழ்க்கையில் பயனுள்ள வெற்றியைப் பெற விரும்புவோர் தயவு செய்து முன்னே வரவேண்டும்! ஊம், வாருங்கள்!

முதியோர் கல்வி மேம்பாட்டுக்கான ஆசிரியர் அழைப்பு விடுத்து வினாடிகள் பல கழிந்ததுதான் மிச்சம்!

முதியோர் கல்வித் திட்டத்தில் சேர அந்தக் கூட்டத்திலிருந்து யாருமே முன் வரவில்லையே?

இளைஞன் காந்திராமன்! பதறினான். கிராமப் புறத்து மக்களின் அறியாமையைப் போக்கி நல்லறிவின் ஒளி வழங்க அரசு பாடுபடும் நல்லெண்

ணத்தை உணர்ந்தறிந்து கொள்ளாமல் ஊர் மக்கள் இருக்கிறார்களே?—இவ்வாறு மனம் வருந்தினான் அவன்!—வீட்டுக்கு ஓடிப்போய்த் தன் தந்தை ஆதியப்ப அம்பலத்தைக் கையோடு அழைத்து வர எண்ணினான்!— "பொழுது விடிஞ்சு பொழுது போனால், காடு கரையிலேயும் வயல் வரப்பிலேயும் உழைச்சுப் பிழைக்கிறதுக்கே பொழுது சரியா யிடுதே! இந்த அவலக் கேட்டிலே, சாகப்போற காலத்திலே படிப்பு ஒண்ணுதான் குறைச்சலோ?" என்று சிலர் வயிற்றெரிச்சலோடு கூவினார்கள்.

காந்திராமனின் கண்கள் கலங்கிக் கசியத் தொடங்கின. "ஐயாமார்களே! உழைச்சுப் பிழைக் கிறது நம்முடைய வீட்டுக் கடமை! உழைச்சால் நம் வீடு விளங்கும்! படிச்சால் நம் நாடு விளங்கும். எழுத்தறிவை நீங்கள் பெற்றால்தான், உங்களுடைய வீடு விளங்குவதோடு, நாடும் சிறப்புற விளங்க முடியும்! நீங்கள் உழைக்கிறீர்கள்; உண்மை தான்! உழைப்பதிலேயே காலம் சரியாகிவிடுகிறது! அதுவும் உண்மைதான்! அலுப்பு மேலிட்டாலும் கூட, அன்றாடம் நீங்கள் எல்லோரும் சாப்பிடாமல் உறங்கிவிடுவீர்களா? இல்லையே? அது போலவே தான், உடலுக்கு உணவு மாதிரி உள்ளத்துக்கு அறிவு தேவைப்படும் தானே!" இவ்வாறு காந்திராமன் கூட்டத்தில் நடந்தபடி உணர்ச்சி வசப்பட்ட நிலையில் பேசிக் கூட்டத்தினரை நோக்கிக் கையெடுத்துக் கும்பிட்டான்!

கூட்டத்தில் மீண்டும் பரபரப்பு ஏற்பட்டது.

"தம்பி, காந்திராமா! இவ்வளவு தூரம் பிறத்தியாருக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கப் பாடுபடுற நீ உன் அப்பனைக் கூட்டி வந்து இந்த முதியோர் கல்வித் திட்டத்திலே சேரச் சொல்வது தானே!"

இவ்வாறு யாரோ வயது முதிர்ந்தவர் ஒருவர் ஏளனமாகக் கூவினார்.

காந்திராமன் மெய் ஒடுங்கி ஒரு கணம் நின்றான்; மறு வினாடியில், அவன் தன் வீட்டுக்குப் புறப்படத் திரும்பினான்.

அப்போது, அங்கே பெரியவர் ஆதியப்ப அம்பலம் தன் மனைவி காமாட்சியோடு ஓடிவந்து கொண்டிருந்தார்—"வாத்தியார் ஐயா! நான் வயதானவன்தான்; ஆனாலும், நான் சாகிறப்ப, நாலெழுத்துப் படிச்சுக்கிட்டவன் என்கிற நல்ல பேரோடவே சாக ஆசைப்படுறேன்! அரசாங்கத்தோட முதியோர் கல்வித் திட்டத்திற்கு நானே முன்னே நின்று சேர்ந்து பிள்ளையார் சுழிபோடுறேனுங்க!" என்று பொக்கை வாய்ச் சிரிப்போடு பேசினார் ஆதியப்ப அம்பலம்.

காந்திராமன் ஆனந்தப் பரவசத்தில் மெய் மறந்து நின்றான்!

"மகனே காந்திராமா! நம்ம ஊர்ச் சனங்களிலே படிக்காத பெரியவங்களையெல்லாம் இந்த

அரசோட வயது வந்தோர் கல்வித் திட்டத்திலே சேரும்படி செய்கிறது இனி என்னோட கடமை யாக்கும்!...நீ காலேஜிலே சேர்ந்து புதுக்கோட் டையிலிருந்து நீ எழுதுற கடிதங்களை நானே படிச்சுப் பார்த்துக்கிடவும் பழகிக்கிடுவேனாக்கும்! —நம்ம கிட்டே இருக்கக் கூடிய செல்வத்தை விட, எழுத்தறிவுச் செல்வம் அழியாதது அப்படின்னு நீ ஒரு வாட்டி பாடம் படிச்சுக்கிட்டு இருந்ததோட உண்மை எனக்குத் தெளிவாகவே மனசுக்குப் புரிஞ்சிடுச்சு, மகனே!'' என்றார் ஆதியப்ப அம்பலம்.

மறு கணத்தில், காமாட்சி அம்மாளும் ஓடிப் பாய்ந்து வந்தாள். ''என் வீட்டுக்காரரோட சேர்ந்து நானும் ஆனா—ஆவன்னா படிச்சுக்கிடப் போறே னுங்க! அப்பத்தானே, எங்க அருமை மகன் காந்திராமன் எழுதுற கடிதங்களை நானும் படிச்சு மகிழ முடியும்?'' என்றாள்.

கூட்டத்தில் சலசலப்பு ஏற்படலாயிற்று.

படிப்பறிவு பெற விழிப்புப் பெற்ற வயது வந்தோர் அரசின் முதியோர் கல்வித் திட்டத் திலே சேர முன்னே வந்தார்கள்!—காந்திராமனின் அன்னை காமாட்சி அம்மாளின் வழியைப் பின் பற்றத் தாய்மார்களும் முன்னே வந்தார்கள்!

''ஆஹா! உங்கள் எல்லோருக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்! நம்ம

தேசத் தந்தை காந்தி மகாத்மா பாரதத்தின் முதுகெலும்பே கிராமங்கள்தான் என்றார்.

கண்கண்ட மகான் காந்தியடிகள் கனவுகண்ட ராமராஜ்யம் என்னும் ராமராஜ்யம் புண்ணியமான ஆனந்தத்திருநாள் இன்று!—எல்லோருக்கும் கல்வி கிடைத்திட பொன் விடியல் தோன்றி விட்டது! எல்லோருக்கும் மீண்டும் நன்றி!—முதியோர் கல்வி ஆசிரியர் பேசிமுடித்தார்!

உண்மைதான்!

அண்ணல் காந்தி அடிகள் மெய்யாகவே மனமுருகி மனம் மகிழ்ந்திருப்பார்தான்!

# மகாத்மாவும் திருடனும் !

பூவை மாநகர் என்பது எங்கள் ஊரின் பெயர். சரித்திரம் பிரசித்தி பெற்ற ஊர் மாதிரி தோன்று கிறதல்லவா? பேஷ்! அதுதான் அந்த ஊரின் அதிர்ஷ்டம். ஏன், தெரியுமா? அது ஒரு பட்டிக்காடு

எங்கள் ஊர்ப்பகுதியிலே 'கோமாவரம் கருப்பையா' என்றால். அழுத பிள்ளையும் வாய் மூடும். அழாத பிள்ளை என்றால், உடனே அழத் தொடங்கி விடும். அவன் என்றால், அவ்வளவு பயம்.

சின்னப்பாப்பாவுக்குக் கூட அவனைத்தெரியும். அதாவது, அவன் பெயர் தெரியும்.

இப்படிப்பட்ட மகிமை கொண்ட அந்தப் புண்ணியவான் யாரென்று தெரிந்தால் ஓட்டம் பிடித்து விடுவீர்கள்,

கதை கேட்க வேண்டுமென்றால் நீங்கள் ஓடிவிடக் கூடாது. அப்போது தான் அழகான இந்தக் கதையைச் சொல்லுவேன்.

என்ன சிரிக்கிறீர்கள்?

ஓ! என் கதையைக் கேட்கத் தான் நின்று விட்டீர்களா?

தங்கப் பாப்பாக்கள் ஆயிற்றே நீங்கள்?

மொரார்ஜிக்குத் தெரிந்தால் நீங்கள் எத்தனை 'காரெட்' என்று சோதிக்க ஆரம்பித்துவிடுவார்.

நான் சொன்ன அந்தப் புண்ணியவான் யார் தெரியுமா?

அவன் ஒரு திருடன்.

அடடே, என்ன இப்படிப் பயந்து விட்டீர்கள்?

கதைத் திருடன் அவன்!

அம்மாடி! இப்போதாவது உங்களுக்கு உயிர் வந்ததே?

கோமாவரம் கருப்பையா, கன்னக்கோல் வைப்பதில் கை தேர்ந்தவன், யாரிடம் பாடம் கற்றானோ தெரியவில்லை.

தெரிந்தால், அந்த வாத்தியாரிடம் நானும் பாடம் படித்துக் கொள்ளப் பிரியப்படுகிறேனோ என்று சந்தேகப்படுகிறீர்களோ?

தயவு செய்து அப்படியெல்லாம் நினைத்து விடாதீர்கள்.

சரி: கதையைக் கேளுங்கள். அப்போது எனக்கு வயது என்ன தெரியுமா?

ஊஹூம், சொல்ல மாட்டேன்! சினிமாக் காரர்களுக்கு மட்டும்தானா வயதை மறைக்கும் உரிமை உண்டு?

அன்று:

நான், பாலகுரு. சுகுணா, தங்கப்பன் எல்லோ ரும் சடுகுடு விளையாடிக்கொண்டிருந்தோம்.



விளையாட்டில், வழக்கம் போல் அடியேனுக் குத்தான் வெற்றி. தோற்றவர்கள் எல்லோரும்.

என்னைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு ஆடினார்கள். நல்லவேளை, நான் தரையில் விழாமல் தப்பினேன். இந்தப் புண்ணியத்துக்காகவும் விளையாட்டில் வென்றதற்காகவும் அரச மரத்தடிப் பிள்ளையாருக்கு மூன்றே மூன்று தோப்புக்கரணம் போட்டு விட்டு வீட்டுக்குப் புறப்பட இருந்தேன்.

அப்போது ஒரு பயங்கர உருவைக் கண்டேன். அவன் தான் கோமாவரம் கருப்பையா, அவன் பெயர் அவனது நெற்றியில் எழுதி ஒட்டப்பட்டிருந்தது. அதாவது, அவனுடைய முறுக்கு மீசையும், மசால்வடை கிருதாவும், புளியங்கொட்டைப் பற்களும், சோடாப்புட்டிக் கண்களும், நாவல்பழச் சிவப்பு நிறமும் கொண்ட அவனை இன்னாரென்று எனக்குக் காட்டிக்கொடுத்துத் தொலைத்தன.

உடனே நான் உஷார் ஆகிவிட்டேன். என் நிஜார்ப்பையில் ஒளிந்து கொண்டிருந்த கைத் துப்பாக்கியை நெருடிப்பார்த்தேன். உடனே, எனக்குத் தைரியம் வந்துவிட்டது.

"அப்பனே, பிள்ளையாரே! எப்பவும் போல் இன்றைக்கும் நல்ல பணம் கிடைச்சிடச் செய். எல்லாப் பிரார்த்தனைக்கும் மொத்தமாக ஒரு செக் எழுதித் தந்திடுறேன்!" என்று பக்தியோடு பிள்ளையாரைக் கும்பிட்டான்.

எனக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. ஆனால், அடக்கிக் கொண்டேன். ஆனால் பீறிட்ட ஆத்திரத்தை மட்டும் அடக்கிக் கொள்ள

முடியவில்லை. துப்பாக்கியை எடுத்து அவனை ஒரே குண்டினால் சாய்த்து விடத் துடித்தேன்.

அதற்குள் அந்தக் களவாணி என்ன செய்தான், தெரியுமா?—அவன் மறைந்துவிட்டான்.

எங்கள் பணத்தைக் காப்பாற்றும்படி சற்றுமுன் விநாயகரிடம் நான் பிரார்த்தனை செய்தேன். தேங்காய்ப் பிரார்த்தனை! அந்தத் தேங்காயை உடைத்து நான்தான் தின்பேனாக்கும்.

ஆனால், இந்தக் கள்ளனோ, ஊரார்பணம் பூராவையும் கொள்ளையடிப்பதற்கு ஐங்கரனின் துயவை ஒசியில் நாடுகிறான்!

பாவம், பிள்ளையார் ஊமையாக இருந்தார்.

அந்த அப்பாவிக் கடவுளுக்காக அனுதாபப் படுவதோடு நிறுத்திக் கொண்டு வீடு வந்தேன். மூச்சுப் பிடிக்கச் சாப்பிட்டேன். நல்லகாலம் மூச்சு பிடிக்கவில்லை. உடனே போட்டேன் ஒரு தூக்கம்.

* * *

அப்பா வெளியூர் சென்றிருந்தார்.

அவ்வளவு பெரிய வீட்டுக்கு நான்தான் காவல்.

என்னிடம் எந்தத் திருட்டுப் பயல் நெருங்க முடியும்? கைத்துப்பாக்கி தலையணைக்கு அடியில் பத்திரமாக இருந்தது.

அம்மாவுக்கு அடுப்படியில் படுத்தால்தான் தூக்கம் பிடிக்குமாம்!

நடுச்சாமம் வந்தது. கோமாவரம் கருப்பையா எங்கள் வீட்டில் கன்னக்கோல் வைத்துக் கொண்டு என் முன்னே தோன்றிவிட்டான்.

என்னுடைய ஆத்திரம் விசுவரூபம் எடுத்தது. "யார் நீ?" என்று அதட்டினேன்.

அவன் அரிச்சந்திரனுக்கு அண்ணன் போலிருக்கிறது. உள்ளதை உள்ளபடி சொன்னான்.

எனக்குச் சிரிப்புச் சிரிப்பாக வந்தது. 'திருடுகிற இந்த ஈனப் பிழைப்பைச் செய்ய உனக்கு வெட்கமாக இல்லையா?" என்று பெரிய குரலில் கேட்டுவிட்டு அவனுடைய முகமூடியைப் பறித்தேன்.

அசந்து நின்ற அவன் "வெட்கமாகத்தான் இருக்குது ஆனால்,என்னோட யானைப்பசிக்கு யார் பதில் சொல்வது?" என்று என்னையேமடக்கினான்.

"உழைத்துப் புசிப்பதுதானே?"

"திருடனுக்கு யார் வேலை கொடுப்பாங்க?"

"அப்பாவிடம் சொல்லி உனக்கு வேலை போட்டுத் தருகிறேன். இன்று போய் நாளை வா!"

"சரி; இன்றுமட்டும் இங்குள்ளதை அபகரித்துக் கொண்டு, நாளை நல்லவனாகத் திரும்பி வருகிறேன்!" என்று சிரித்தான் அந்தத் திருடன்.

என் ஆத்திரத்துக்கு '144' போட்டுவிட்டு, ஒரு சோதனை நடத்தினேன்.

'அப்பனே! எங்க சொத்தைக் கொள்ளை அடிக்கிறதிலே நீ இவ்வளவு சந்தோஷப்படுறாயே! அந்தச்சொத்தைஇழந்தால் நாங்கள் வேதனைப்பட நேருமே, அந்த உண்மையை நீ எப்போதாவது சிந்திச்சுப் பார்த்தது உண்டா? எதைச் செய்தாலும் அவங்களோட மனசுக்கும் ஊர் உலகத்துக்கும் உண்மையாக நடக்க வேணும்னு காந்தி என்கிற மகாத்மா சொல்லியிருக்காங்க! நீ கண்ணுக்குத் தெரிகிற சட்டத்தை ஏமாத்திடலாம். ஆனா, கண்ணுக்குத் தெரியாத கடவுளை உன்னாலே ஏமாத்திட முடியுமா? ஊம், சொல்!'' என்று அமைதியாகக் கேட்டேன்.

அவ்வளவுதான்!

உடனே அந்த பக்காத்திருடன் என்ன செய்தான் தெரியுமா? அவன் அடியேன் கால்களில் நெடுஞ் சாண் கிடையாக விழுந்தான். கண்ணீர் வழிந்தோடிய கண்ணைத் துடைத்துக் கொள்ளாமல் விம்மினான்: "ஐயோ! இந்த உண்மையை நான் இது வரை புரிஞ்சுக்கவே இல்லை. யாரும் எனக்குச் சொல்லிக் கொடுக்கவும் இல்லையே? இனி திருடவே மாட்டேன்'' என்று என்மேல் ஆணை வைத்தான். கன்னக் கோலை ஒடித்து என் முன்னால் தரையில் போட்டான். பிறகு எடுத்தான் ஓட்டம்!

ஒன்பதாவது அதிசயமாகத் தோன்றுகிறதா உங்களுக்கு?

சரி. பத்தாவது அதிசயத்தையும் தேடுங்கள்.

நான் யாரென்று உங்களுக்குப் புரிகிறதா? கண்டுபிடியுங்களேன்!

# கண்ணாமூச்சி ஆடலாம்!

அந்தத் தெருவில் திருவிழா ஒன்றும் நடக்கவில்லை என்றாலும் திருவிழா பட்டபாடுதான் போங்கள்!

அடடே, போய்விடாதீர்கள்.

நில்லுங்கள் அதோ, பாருங்கள்!

அந்தத் தம்பிதான் வேணு.

அவன்: பழனி.

ஓடி வருகிறானே பொடியன் அவனுக்குப் பெயர் வரதன்.

அதோ டில்லி, குப்புசாமி, ஹரிகரன், இப்ராகிம் ஜோசப், ரவிசங்கர், ராமலிங்கம் கோதண்டம், நாராயணன், துரைராஜ், ராமசாமி!...

சிறுவர் உலகம் விந்தை மிக்கது அல்லவா?

அவர்கள் எல்லோரும் கண்ணாமூச்சி ஆட்டம் ஆட வேண்டுமென்று திட்டமிட்டார்கள்.

இக்காட்சியை ரசிக்க பாபு நாயுடு, வரதன் முதலியார், தியாகராஜன், சிவப்பிரகாசம் ராஜ கோபால், சீனிவாசன், வேம்புலி, ஆறுமுகம், வில்லி யம்ஸ் ஆகியோர் காத்திருந்தார்கள்.

ஞாயிற்றுக்கிழமைப் பொழுதைக் கழிக்க வேண்டாமா?

காலைப் பொழுது வெகு அற்புதமாக விளங் கியது.

பூவா தலையா போடப்பட்டது. பூ விழுந்தால், முதலில் கண்களில் துணியைக் கட்டிக்கொள்ள வேண்டியது பழனியின் பொறுப்பு என்று திட்டம் உருவானது. விழுந்தது பூ!

சிறுவர்கள் கும்மாளம் கொட்டி ஆரவாரம் முழக்கினர்.

"டே, கோட்டை ஜாக்கிரதையாப் போடு. இல்லாட்டா. அந்த வஞ்சகச் சீனப்பயல்களுக்கும் பாகிஸ்தான் காரர்களுக்கும் உண்டான கதி உனக்கும் நேர்ந்திடப் போவுது. எல்லைக் கோடு விஷயத்திலே ரொம்ப ரொம்ப ஜாக்கிரதை வேணுமாக்கும்" என்றான் வேணு.

"ஆமா...ஆமா" என்று பழனி வானத்துக்கும் பூமிக்குமாகக் குதித்தான்.

எல்லாம் தயார்!

"கண்ணாமூச்சி ஆடலாம்...வாங்க வாங்க!" குரல் மூன்று முறை சட்ட ரீதியாக ஒலித்தது.

"எஸ்...ரெடி...!" என்று முத்தாய்ப்பு வைத்து விட்டு துணியை எடுத்துக் கட்டிக் கொள்ள முனைந்தான் பழனி.

அத் தருணத்தில்—

"பழனி நானும்டா! என்ற ஒரு நூதனக் குரல் மொழி பேதத்துடன் எதிரொலித்தது. திரும்பினார்கள்.

சீனச்சிறுவன் 'சூ' நின்றான்!

"டேய் நீ எங்க விரோதியாக்கும்! உன்னை நாங்க எங்க, ஆட்டத்திலே சேர்த்துக்க மாட்டோம். மரியாதையாப் போயிடுடா, சூ!...என்று கோபாவேசம் பொங்கக் கூவினான் வேணு.

மற்றவர்கள், 'சூ...ஓடு!" என்று கோஷமிட்டார்கள்.

அந்தப்பையன் சூ—மிங்—வி வியர்வை சொட்ட, கண்ணீர் வழிய செருமியவனாக அப்படியே நின்றான். பிறகு சட்டை ஓரத்தால் முகத்தைத் துடைத்துக் கொண்டு, "இந்தா பாருங்க!... நான் உங்க பொது விரோதியான சீன தேசத்துக்காரப் பையன்னு தானே என்னை உதாசீனம் செய்றீங்கோ?... நான் உங்க தம்பியாட்டமப்பா!... சீன நாட்டுக்காரனானாலும், நான் பிறந்தது இங்கே

தான்!...எங்க நாட்டவர்களோட வஞ்சகப் போக்கு எங்களுக்குக் கட்டோட பிடிக்காதப்பா! என்னை நம்புங்க!...நாங்க இவ்வளவு காலமா உங்க நாட்டு உப்பைத்தானே சாப்பிட்டுவரோம்!" என்று நன்றியுணர்வு மேலிடக் கெஞ்சினான் சீனத்துச் சிறுவன்

'ஊ ஹூம் முடியாது!"

"ம்...ஓடு!...இல்லாட்டா உன்னை ஓட வச்சிடுவோம்!—'

"இந்தாப்பா, கல்!"

"டேய்...! அதைக் கீழே போடுப்பா!...முதலிலே நீங்க எல்லாரும் எங்க வீட்டுக்கு வாங்க!" என்று மீண்டும் கெஞ்சிக் குழைந்தான் சூ.

அவனது வற்புறுத்தலின் பேரில் விளையாட்டை மறந்து, எல்லோரும் அவனைத் தொடர்ந்தார்கள். சூவின் வீட்டினுள் நுழைந்தார்கள் அவன் காட்டிய அறையில் பிரவேசித்தார்கள்.

என்ன ஆச்சரியம்!...

அங்கே காந்திஜி, நேருஜி, இந்திரா காந்தி முதலிய பெருந் தலைவர்கள் படரூபத்தில் சுவரை அலங்கரித்தார்கள்.

கீழே குனிந்தான் பழனி.

சீன நாட்டு வஞ்சகக் குள்ள நரியின் படம் நொறுங்கிக் கிடந்தது.



பழனியின் பார்வையில் நேருஜியின் வாசகம் தென்பட்டது.

"நாடு கடந்து மொழி கடந்து இனம் கடந்து உலக மக்கள் எல்லோரும் உண்மையான அன்பும் பாசமும் கொண்டு ஒன்றுபட்டு வாழும் நாள் தான் சுபநாளாகும்!"

அனைவரும் சீனச் சிறுவனை அன்புடன் அணைத்துக் கொண்டார்கள்.

# பிஞ்சு நெஞ்சு

டாக்டர் ரங்கசாமிக்கு அறந்தாங்கியில் நல்ல பெயர். கைராசிக்காரர். இவருடைய பெயரைக் கேட்டாலே, நோய் ஓடிவிடும். நோயாளிகள் பெரு வாரியாக இவரது மருத்துவனையைத் தேடிக் கொண்டு வரத் தொடங்கினார்கள்.

ஆனால், டாக்டர் முன் கோபக்காரர், நோயாளி களிடம் 'சிடு சிடு' வென்று எரிந்து விழுவார்.

இப்படிப் பேசினால், நோயாளிகளுக்குஅமைதி கிடைக்குமா?

நோயைத் தீர்க்கும் வல்லமை பெற்றிருந்த இந்த டாக்டருக்கு தம் கோபத்தை ஆற்றிக்கொள்ள மட்டும் தெரியவில்லை!

டாக்டர் ரங்கசாமிக்கு ஒரு பெண் குழந்தை உண்டு. அதற்கு வயது ஒன்பதுதான் இருக்கும். செல்லப் பெண். அவள் பெயர்: பூங்கோதை.

பூங்கோதையிடம் அவள் அப்பாவின் முன் கோபத்தைப் பற்றிச் சொல்லி இரண்டொரு நோயாளிகள் வருத்தப் பட்டார்கள்.

பூங்கோதையும் அவர்களுடைய நியாயமான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டாள். மேலும் "ஆறுவது சினம்" என்ற ஆத்திசூடிப் பாட்டை அவள் முதல் வகுப்பிலேயே படித்திருந்தாள். ஔவைப் பாட்டி சொன்ன வாக்கை எச்சரிக்கையாகக் கொண்டு, கோபத்தை ஆற்றி வந்தாள். எப்போதாவது அம்மா தன் மீது கோபப்பட்டால் மாத்திரம், சிறுமிபூங்கோதை பதிலுக்கு அம்மாபேரில் கோபப்படுவது உண்டு. ஆனால், சமயசஞ்சீவியாக ஆத்திசூடிப் பாடல் ஞாபகத்துக்கு வரும் அம்மாவும் அந்தப் பாட்டை ஒப்புவிப்பாள். மகளும் அதே பாடலைத் திருப்பிச் சொல்லுவாள். ஆக 'ஆறுவது சினம்' என்ற அந்தப் போதனைப் பாட்டு இரு தரப்பிலும் உயர்ந்து, அமைதியை நிலை நாட்டிவிடும்.

ஆனால், இந்த டாக்டர் அப்பா மட்டும் கோபத்தை அடக்காமல் இருக்கிறாரே என்று பிஞ்சு மனம் வெகுவாக வருந்தத் தொடங்கியது!

ஒருநாள் அப்பாவிடம், அப்பா, "அப்பா! ஔவை மூதாட்டி ஆறுவது சினம்னு தானே பாடினாங்க? 'சினம் விலக்கேல்'—அப்படின்னு பாடலீங்களே!" என்று ஒரு கேள்வியை மெதுவான குரலில் கேட்டாள்.

டாக்டர் ரங்கசாமி லேசாகச் சிரித்துவிட்டார். "ஊஹூம் இல்லை! நீ போய் வேறு பாட்டைப்படி அம்மா!" என்று கூடத்துக்கு மகளை அனுப்பி

விட்டு, மருத்துவ நூல் ஒன்றைப் படிப்பதில் ஈடு பட்டார்.

அன்றைக்கு மத்தியான்னம் மணி பன்னிரண்டு அடித்து விட்டது.

ஒரு நோயாளிகூட அவரது ஆஸ்பத்திரியைத் தேடி வரக்காணோம்!

டாக்டருக்கு வியப்பு மேலிட்டது. என்ன விசேஷம். வாடிக்கை நோயாளிகளைக்கூட காண வில்லையே! என் மருந்து இல்லாமல் அவர்களுக்கு நோய் தீர்ந்து விட்டதா? அல்லது, என் மருந்து வேலை செய்து அதன் பலனாக, அவர்களுக்கு நோய் குணமாகிவிட்டதா? அல்லது, அவர்கள் எல்லாரும் வேறு டிஸ்பென்சரிக்குப் போய் விட்டார்களா?'' என்று பிரமாதமாகச் சிந்தனை பண்ண ஆரம்பித்துவிட்டார்.

மருத்துவ மனையில் நிலவியிருந்த பயங்கர அமைதியைக் கண்டு டாக்டரின் அருமைப் புதல்வி பூங்கோதையும் வருந்தினாள்.

கம்பவுண்டர் கண்ணப்பனும் மௌனமாக நின்றார்.

அப்போது, டாக்டரின் மனைவி மங்களம் வந்தாள். "நேற்று நீங்க இரண்டொரு நோயாளி களிடம் கோபமாய்ப் பேசினீங்களே, அதனாலே, அவர்கள் இங்கு வராமல், வேறு இடத்துக்குப்

போயிருப்பாங்களோ, என்னவோ?'' என்று ஒரு சந்தேகத்தை வெளியிட்டார்.

டாக்டருக்கு அப்போதுதான் தன் தவறு புரிந்தது. எம். பி. பி. எஸ். படிப்பின் போது நோயாளிகளிடம் டாக்டர்கள் நடந்து கொள்ள வேண்டிய அன்பான அமைதியான முறைகளைப் பற்றி அடிக்கடி பாடம் போதித்துக் கொடுத்த நிகழ்ச்சிகளை அவர் நினைவு கூர்ந்தார். "இனி நான் புது மனிதனாக மாறவேண்டும். நோயாளி களிடம் இனிகோபப் படவே மாட்டேன்!''

டாக்டர் ரங்கசாமி இவ்வாறு வாய்விட்டு பலத்த குரலில் பேசிவிட்டார்.

அருகில் மகள் பூங்கோதை நின்ற ரகசியத்தை அப்போதுதான் அவர் உணரலானார்.

உடனே, சிறுமி பூங்கோதை மகிழ்வுடன் குதித்தாள். "அப்பா, அப்பா!...பேஷ், பேஷ்!... நீங்க திருந்திட்டீங்க!...இனி எங்க அப்பா கோபப் படவே மாட்டாங்க! ஔவைப் பாட்டியோட பாட்டுக்கு இவ்வளவு மகத்துவம் இருக்குதே?'. என்று குதூகலத்தோடு சொல்லி, வானத்துக்கும் பூமிக்குமாகக் குதித்தாள் அவள்.

டாக்டருக்கு வாயெல்லாம் பல் ஆகிவிட்டது. அதாவது, வாய்விட்டுச் சிரித்தார்!

"அப்பா, நம் டிஸ்பென்சரிக்கு வருகிற நோயாளிகள் எல்லாரும் உங்க கோபத்துக்குப் பயந்துதான் வரலையாம்!" என்று சமயம் பார்த்துத் தெரிவித்தாள் சிறுமி.

"எப்படி அம்மா இந்த விஷயம் உனக்குத் தெரியும்?"

"அவங்க சொன்னாங்க!

"ஓ! அப்படியா? சரி இனிமேல் அவர்களை எப்படியம்மா டிஸ்பென்சரிக்கு திரும்பி வர வழைப்பது? வேறு டாக்டர்களிடம் சிகிச்சை பெற ஆரம்பிச்சிருப்பாங்களே?"

"அவர்கள் மீண்டும் நம் ஆஸ்பத்திரிக்குத்தான் வருவார்கள். அதற்கு நான் பொறுப்பாக்கும்" என்று நமட்டுச் சிரிப்புடன் கூறினாள் பூங்கோதை.

"எப்படியம்மா இவ்வளவு தைரியமாகச் சொல்கிறாய்?" என்று கேட்டார் டாக்டர்.

"என் அன்புக்காக அந்த நோயாளிகள் மீண்டும் இங்கு வருவார்கள், அப்பா" என்று கூறிச் சிரித்தாள் பூங்கோதை.

அடுத்த சில நிமிடத்தில் டாக்டரின் வீட்டு வாசலில் வாடிக்கை நோயாளிகள் பலர் வந்து கூடிவிட்டார்கள். டாக்டருக்கு ஒன்றும் புரிய வில்லை.

அதற்கு உண்மையான ரகசியம் ஒன்றும் இருந்தது.

அது பூங்கோதைச் சிறுமிக்கு மட்டும்தான் தெரியும்.

டாக்டர் அப்பாவின் கோபத்துக்கு 144 போட எண்ணிய சிறுமி பூங்கோதை ஒரு தந்திரத்தைக் கையாண்டாள்.

வாடிக்கை நோயாளிகளுக்கெல்லாம் கம் பவுண்டர் கண்ணப்பனைக் கொண்டு மருந்துகளை ரகசியமாகக் கொடுக்கச் செய்தாள் பூங்கோதை பிறகு அப்பாவிடம் நாடகம் நடத்தி வெற்றி பெற்றதும், அவர்களுக்குச் சேதி சொல்வதாகவும் அவர்களிடம் ஆறுதல் கூறியிருந்தாள்.

சிறுமியின் வெற்றி சிறப்பானது அல்லவா?

இந்த ரகசிய நாடகம் நாளது தேதிவரை டாக்டர் ரங்கசாமிக்குத் தெரியவே தெரியாது! —ஆமாம். இது உண்மையிலும் உண்மை.

ஆனால் நீங்கள் மட்டும் இந்தச் சிதம்பர ரகசியத்தை அந்த டாக்டரிடம் சொல்லி விடாதீர்கள்!

# தீபாவளி வேடிக்கை

அந்தத் தீபாவளி வேடிக்கை ரொம்பவும் வேடிக்கையான கதைதான், போங்கள்!

அடடே, போய் விடாதீர்கள்!

நின்று கேளுங்கள்.

கதையைச் சொல்லட்டுமா?

சரி:

தீபாவளிப் பண்டிகை என்றால் சிறுவர்களுக்கும் சிறுமியருக்கும் ஏற்படக்கூடிய மகிழ்ச்சிக்குக் கேட்கவா வேண்டும்? அவரவர் தலைகால் தெரியாத குதூகலத்தில் திளைத்திருந்தார்கள். அதாவது, தலையையும் காலையும் தெரிந்து சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தார்கள்!

அந்த வட்டத்துப் பிள்ளைகள் ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

அந்த முடிவு என்ன தெரியுமா?

சீனாக்காரன் செய்தனுப்பிய வெடிகளைச் சுடாமல், நம் நாட்டில் தயாரிக்கப்பட்ட வெடிகளையும் மத்தாப்பூக்களையுமே உபயோகிப்பது என்பதுதான் அவர்கள் செய்து கொண்ட தீர்மானம். எடுத்துக் கொண்ட முடிவும் ஆகும்!

அந்தக் கூட்டத்திலே, அங்கங்கே சிறுவர்களும் சிறுமிகளும் மத்தாப்பு கொளுத்தியும் வெடி சுட்டும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு உதவியாக, பதவிசான குணத்துடன் மாடத்தில் இருந்தது அகல் விளக்கு ஒன்று.

அகலுக்கும் அவ்வேடிக்கைகளைக் காண உள்ளூற மகிழ்வுதான்! அந்தக் களிப்பில், காது துளைபட எழுந்த சத்தங்களைக் கூட அது பொருட்படுத்தாமல், தன்னுடைய கடமையில் கருத்துப் பதித்திருந்தது!

"டோய், பார்த்தாயாடா மத்தாப்பூ ஜோதியை!" என்றான் ராமன். அவன் ஏழை வீட்டுப்பிள்ளை.

"ஆமாண்டா, ஆமாண்டா! இந்த அகல் விளக்கும்தான் இருக்குதே. துளியூண்டு வெளிச்சத்தோட!...ப்பூ!..." என்று நையாண்டி பேசினான் மோகன். இவனோ பங்களாவுக்குடைய பிள்ளை.

இந்த உரையாடலின் கேலியை உணர்ந்து அகல் விளக்குக்கு மனத்தில் துயரம் மூண்டது. அது பெருமூச்சு விட்டது.

"கண்டாயா, என்னுடைய மகிமையை? என்னுடைய அழகின் ஒளியைப் பார்த்தாயா? நீயும் தான் இருக்கிறாயே. கொஞ்சம்கூட வெளிச்சம் தெரியாமல்—உன் இருப்பிடத்தைக் காட்டக்கூட வகையற்று!...ப்பூ!..." என்று மத்தாப்பு எக்காளமிட்டுச் சிரித்தபடி, அகலைக் கேலி செய்தது.

சிறுவர்—சிறுமியர் செய்த ஏளனம் போதாதென்று, மத்தாப்பூவும் கேலி செய்தது அகல் விளக்கின் துயரத்தைப் பன்மடங்காக்கிற்று. அதன் கண்கள் கலங்கின. ஆனாலும், அது பெருமூச்சை மட்டும் வெளியேற்றிவிட்டு, 'உம்' மென்று பொறுமை பூண்டு இருந்தது. தன்னுடைய அடங்கிய—அளவான—மங்கிய ஒளியை தனக்குத் தானே ஒருமுறை நோக்கிக் கொண்டது. பின்னர், நமட்டுச் சிரிப்பொன்றைச் சிரித்துக் கொண்டது—ஆமாம், தனக்குள்ளேதான்!

அடுத்த கணம், என்ன நடந்தது, தெரியுமா?

கூத்தும் கும்மாளமும் அடங்கின.

சிரிப்பும் விளையாட்டும் நின்றன.

ஏனென்று இன்னுமா உங்களுக்கு விளங்கவில்லை?

சரிதான் போங்கள்!

அடடே, போய் விடாதீர்கள்!

பாக்கிக் கதையைக் கேளுங்கள்!

அந்தச் சின்னஞ்சிறு உலகின் மகிழ்ச்சி தடைபட்டதற்குக் காரணம் இதுதான்:

அங்கு இருந்த வெளிச்சம் மறைந்தது; இருள் சூழ்ந்தது!

சின்னஞ்சிறுவர்—சிறுமியர் கூட்டம் மலைத்துப்போய் நின்று விட்டது.

மத்தாப்பூக்கள் டப்பாக்களுக்குள் தூங்கின.

ஒருமுறை இத்தகைய சூழ்நிலைக் காட்சியை நோட்டம் விட்டது அகல் விளக்கு. அதற்கு ஏற்பட்டிருந்த மகிழ்ச்சி கொஞ்சநஞ்சமில்லை. அது ஒரு நொடிப் பொழுதிற்குத்தான்!...மறு வினாடி, அது தன் மனத்தை விரியச் செய்தது.

'ஐயையோ!... சின்னூண்டு அகல்விளக்கு அணைஞ்சு போனதாலே, நாமெல்லாம் மத்தாப்பூ கொளுத்தி விளையாட முடியாமப் போயிடுச்சுதே!' என்று புழுங்கினார்கள்.

மத்தாப்பூக்களின் பரிதாபக் கோலத்தைக் காண அகல் விளக்கு மனம் நெகிழ்ந்தது.

சிறுவர்—சிறுமியர் துயரத்தைப் பார்த்த அகல் விளக்கின் உள்ளம் இளகியது.

அடுத்த கணம், மறைத்து வைத்திருந்த ஒளியை வெளியே காட்டியது அந்த அகல்

விளக்கு, அடக்கமான ஒளியுடன் அது விளங்கியது, வழக்கம் போலவே!

மீண்டும் குழந்தைகள் உலகம் கும்மாளமிட்டது; மத்தாப்பூக்கள் சிரித்தன.

இக்காட்சியைக் காணக் காண, எளிமை மிக்க அகல் விளக்கின் மகிழ்ச்சி இரட்டித்தது. அதன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் நிறைந்தது. பலனைப் பற்றிக் கருதாத கடமை என்னுடையது!... என்று அந்த அகல் விளக்கு தன்னுள் சொல்லிக் கொண்டது.

தீபாவளி வேடிக்கைகளுக்குக் கேட்க வேண்டுமா, என்ன?

# அந்த ஆண்டி எங்கே?

பூவைமாநகர்ப் பாலதண்டாயுதபாணி கோயில் பங்குனி உத்திரத்தன்றைக்குத்தான் குரு பூஜை, சுவாமிக்குத் தூப தீபாராதனை செய்து முடிந்ததும். "கரும்ஜனங்கள்' என்றழைக்கப்பட்ட ஏழை எளிய வர்களுக்கு அன்று அன்னம் வழங்கப்படும். முன் கூட்டியே, சுற்றுவட்டப் பதினாறு தலைக்கட்டுக் கிராமங்களுக்கும் இவ் விவரம் பறை அறிவீக்கப் படுவதும் வழக்கமாக இருந்து வந்தது, அவ்வாறே அவ்வருஷமும் சந்தைகளிலே குருபூஜைச் செய்தி அறிவிக்கப்பட்டிருந்தது.

கூட்டம் பெருகிவரக் கேட்கவும் வேண்டுமா?

வெள்ளம்போல மக்கள் திரள் கூடியது.

காலம் வெறிச்சோடிக் கிடந்தது.

பணம் கிடைத்தாலும், அரிசி கிடைக்காத காலம் இது.

இந்நிலையிலே, ஏழைபாழைகளின் கூட்டத் திற்குக் கேட்க வேண்டியதில்லை தானே?

ஏழை எளியவர்களுக்கு அன்னதானம் வழங்கும் 'குருபூஜை' ஆரம்பமாயிற்று.

இவ்விழாவுக்கு ஊர் நாடுகளில் அவர்களின் வசதிக்கும் இதயத்துக்கும் தக்கபடி, படி, மரக்காலில் அரிசி அளந்து கொடுத்திருந்தார்கள். இது போக, கோயில் சொந்தக்காரர்களான அந்த மூன்று குடும்பங்களும் தலைக்கு ஒரு பொதி அரிசியையும் காய்கறி பருப்பு வகைகளையும் அளித்திருந்தார்கள்.

"ஏழு கோடி மந்திரங்கள் உந்தன் சடாட்சரத்துள் அடக்கம்! முருகா!" என்னும் கோஷங்கள் முழக்கமிட்டன.

மூன்று குடும்பத்தார்களும் விபூதி பிரசாதம் பெற்றனர். அடிமைப் பூசாரிக்கும் பிரசாதம் வழங்கப் பெற்றது.

அன்னதான நிகழ்ச்சி ஆரம்பமாகிவிட்டது.

ஆண்களும் பெண்களும், வயதானவர்களும், குழந்தைகளும் குஞ்சுகளுமாகக் கும்பல் நிரம்பி வழிந்தது.

கோயில் அடிமைக்காரர்களான அந்த மூன்று குடும்பத்தினைச் சேர்ந்த ராமையா, முத்தையா, வீரய்யா ஆகிய மூன்று பிரதிநிதிகளும் அந்த மூன்று பெரும் பந்திகளையும் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

அவரவர்களுக்கு மந்தாரை இலைகள் போடப்பட்டன. அடுத்தபடியாக, சோறும் குழம்பும் போடப்பட்டன.

ஒரே மூச்சாக, ஆவலுடன் அவரவர்கள் சோறு உண்ணத் தலைப்பட்டார்கள்.

அதோ, அதுதான் ராமையாவின் பொறுப்பில் நடந்த சாப்பாட்டுப் பந்தி.

கையில் சுழன்ற கழியுடன் அவன் டெர்லின் சட்டை மின்ன 'கார்வார்' செய்து கொண்டிருந்தான்.

ஆ! என்ன கலாட்டா அது?

ஏன் அப்படி எள்ளும் கொள்ளும் வெடிக்கிறது ராமையாவின் முகத்திலே?

விஷயம் இதுதான்.

குடுகுடு கிழவன் ஒருவன் தனக்குப் போட்ட சாப்பாட்டைச் சாப்பிட்டுவிட்டு, மீண்டும் ஒரு தரம் ரகசியமாகச் சோறும் குழம்பும் வாங்கிக் கொண்டு தன்னுடைய கந்தல் துணியில் முடிந்து கொண்டிருந்தான். இதைக்கண்டு கொண்டான் ராமையா. இளம் இரத்தம் துடித்தது. இயல்பாக இருக்க வேண்டிய பச்சாதாபத்தையும் கடந்து அவன் ஆத்திரம் கொண்டான்.

ராமையாவின் கையிலிருந்த கழி சுழன்றது.

அக் கழி கிழவன் மேனியில் விளையாடியது.

பாவம், அவன் புழுவாகத் துடித்தான். சாவின் சந்நிதியை நெருங்கிக் கொண்டிருந்த அவனால் அந்த அடிகளையும் உதைகளையும் தாங்கிக் கொள்ள முடியவில்லை. "ஐயா! என்னை மன்னிச்சிடுங்க ஐயா! என் பெஞ்சாதி காய்ச்சலாக் கிடக்குது. அந்தக் கிழவிக் கோசரம்தான் கொஞ்சம் சோறும் குழம்பும் வாங்கி முடிஞ்சுக்கிட்டேன். நான் செஞ்சது தப்புத்தான். ஆனாலும், இந்தப் பாழும் வயிற்றுக்குப் பொய்யும் நியாயமும் எங்கே தட்டுப்படுது?—அதுக்குக் கவலையெல்லாம் அதோட பசிதானே ஐயா!...என்னை மன்னிச்சுப்பிடுங்க! உங்களுக்குப் பசியைப் பற்றித் தெரியாது! ஆனதாலே, பசியை அறிஞ்ச என்னை இந்தத் தடவை மன்னிச்சுப்பிடுங்க ஐயா!..."என்று கதறினான் கிழவன்.

ஆனால் ராமையாவின் செவிகளில் அந்த ஏழை சொல் விழவில்லை. கிழவன் ஒளித்து வைத்திருந்த சோற்றை—குழம்பு கலந்த சோற்றை அவிழ்த்து அண்டாவில் கொட்டினான்.

இதைக் கண்டதும் அந்தக் கிழவனுக்கு நெஞ்சு கொதித்தது. தன்னை மீண்டும் அடிக்க வந்த ராமையாவை நோக்கி! "இந்தப் பாவம் தெய்வத்துக்கே அடுக்காது ஐயா! புண்ணியம் சம்பாதிக்

கிறதுக்கு அன்னதானம் செய்வாங்க, ஆனால் நீங்களோ பாவத்தைச் சம்பாதிக்கிறீங்களே?'' என்று பொரிந்து தள்ளியவன், நீர் வழிந்த கண்களுடன் அவனை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தான்.

மறுகணம் அவன் என்ன செய்தான் தெரியுமா?

தன் கைக் கம்பினால் ராமையாவை நெட்டித் தூரத் தள்ளிவிட்டான் அந்தப் பிச்சைக்காரக் கிழவன்.

எட்டத்தேபோய் விழுந்து விட்டான் ராமையா. அவனது டெர்லின் சட்டையில் சகதி படிந்தது. கூட்டம் கூடியது. ஆத்திரம் பொங்க எழுந்தான் ராமையா. கீழே கிடந்த சவுக்கு விறகு ஒன்றை எடுத்து, அந்த வயோதிக ஏழையைத் தாக்க மீண்டும் முனைந்தான் அப்பணக்கார இளைஞன்.

அப்போது, ஆண்டிப்பண்டாரம் ஒருவன் அவசரமாகப் பாய்ந்து குறுக்கே மறித்து நின்றபடி, ராமையாவைத் தடுத்தான்.

''தம்பி! கோபத்தை அடக்கு, ஆனால் அன்பை அடக்கிவிடாதே! அதோ பார், பாம்பு! இந்த ஏழை மட்டும் உன்னைக் கழியால் தடுத்திராவிட்டால், இந்நேரம் அந்தப் பாம்புக்குப் பலி ஆகியிருப்பாயே நீ!...தெய்வம் அன்பின் சோதனையிலே மனிதர்கள் ரூபத்திலேயும் வருவது இல்லையா தம்பி? கலிகாலம் இது! வரவர, எதிலேயும் ஏன் தெய்வத்தின் நினை

விலே கூட, ஜனங்களுக்கு நம்பிக்கை குறைந்து விட்டது போலிருக்கிறது!...நீ இன்று மறு பிறப்பு எடுத்திருக்கின்றாய்!...அந்த ஏழையிடமிருந்து பறித்த உணவை அவன்வசம் ஒப்படைத்து அவனிடம் மன்னிப்புக் கேள், தம்பி!'' என்றான் அந்த ஆண்டிப்பண்டாரம்.

இளைஞன் ராமையா திரும்பினான். அந்தப் பாம்பு சீறிக்கொண்டு ஓடியது. அவன் அக் கிழவனை நோக்கினான்.

கிழவனோ தன் குடிசையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான்.

ராமையா அவனை எவ்வளவு மன்றாடி அழைத்தும் அக்கிழவன் திரும்பவில்லை. "ஏழைங் களுக்கும் மானம் உண்டு ஐயா! உங்க சோற்றை நீங்களே சாப்பிடுங்க...உங்க சோற்றை நான் முதலிலே உண்டதே பாவம்!'' என்று சொல்லி வழி நடந்தான்.

ராமையா நெஞ்சுச் சுமையுடன் திரும்பினான். அவன் அந்த ஆண்டிப்பண்டாரத்தைத்தேடினான்.

அவனைக் காணவில்லை!
எங்கே அந்த ஆண்டி!

அவனைக் காணவேயில்லை!

ஒருவேளை, இந்த ஆண்டிதான் "அந்த ஆண்டி''யாக இருப்பானோ?

# அரிச்சந்திரன் நெ: 2

எங்களூர்ப் பகுதியிலே 'கோமாவரம் கருப்பையா, என்றால், அழுதபிள்ளை வாய் மூடும்; அழாதபிள்ளை அழத்தொடங்கும்! அவ்வளவு பயம் அவனென்றால்! சின்னப் பிள்ளைக்குக்கூட அவனைத் தெரியும்; அதாவது, அவன் பெயர் தெரியும். இப்படிப்பட்ட மகத்துவம் பூண்ட அவன் யாரென்று தெரிந்தால் உங்களுக்கும்கூடஅஸ்தியில் ஜுரம் வந்து விடுமே!

அவன் ஒரு திருடன். கன்னக்கோல் வைப்பதில் கை தேர்ந்தவன்; அதாவது, அவனுடைய கை தேர்ந்திருந்தது. யாரிடம் சிட்சை பெற்றானோ?

தெரியவில்லை.

தெரிந்தால், அந்த வாத்தியாரிடம் நானும் பாடம் கற்றுக்கொள்ளப் பிரியப்படுகிறேனோ வென்று சந்தேகப் படுகிறீர்களோ?

தயவுசெய்து அப்படியெல்லாம் நினைத்துவிடக் கூடாது.

அப்போது நடந்த ஒரு கதையைச் சொல்லட்டுமா?

சரி.

அப்போது, எனக்கு வயது என்ன தெரியுமா?

ஊஹூம், வயதைச் சொல்லலாமா?—கூடாது, கூடவே கூடாது!

சினிமாக்காரர்களுக்கு மட்டும்தானா வயதை மறைக்கும் உரிமை உண்டு?

சரி.

அன்று நான், பாலன், அம்புஜம், தங்கப்பன், சுந்தரம் எல்லோரும் 'சடு குடு' விளையாடிக் கொண்டிருந்தோம்.

விளையாட்டில் வழக்கம் போல எனக்குத்தான் ஜெயிப்பு. எல்லோரும் அதாவது தோற்றவர்கள் எல்லோரும் என்னைத் தலைமேல் தூக்கி வைத்து ஆடினார்கள். அவர்களை அனுப்பிவிட்டு, நான் என் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். அந்தி சந்திப் பொழுது அது. வழியிலிருந்த அரச மரத்துப் பிள்ளையாரப்பனுக்குத் தோப்புக்கரணம் செலுத்த எண்ணினேன். என் கடனை—செலுத்த வேண்டிய கடனைச்—செலுத்திவிட்டு வலம் வந்தேன்.

அது சமயம், நான் ஒரு பயங்கர உருவத்தைக் கண்டேன். அவன்தான் 'கோமாவரம் கருப்பையா'

அவன் பெயர் அவன் நெற்றியில் எழுதப்பட்டிருந்தது. அதாவது அவனுடைய முறுக்கு மீசையும் மசால்வடை கிர்தாவும் புளியங்கொட்டைப் பற்களும் சோடாப் புட்டிக் கண்களும் அவனை இன்னாரென்று எனக்குத் தெரிவித்தன. நான் உஷார் ஆனேன்.

அந்தக் களவாணி விநாயகப் பெருமானுக்குத் தேங்காய் உடைத்தான். சூடம் காட்டினான்; "அப்பனே! எனக்கு மாமூல் வரும்படியைக் கொடுத்துவிடு. நானும் உனக்குச் செலுத்த வேண்டிய மாமூல் காணிக்கையைச் செலுத்தி விடுகிறேன்!" என்று கும்பிட்டான்.

எனக்கு அது வேடிக்கையாகவும் வினையாகவும் பட்டது.

பின் என்னவாம்?

திருடுபோகாமல் எங்கள் பணம் காசைக் காப்பாற்றும்படி சற்றுமுன் இதே பிள்ளையாரிடம் நான் வேண்டுதல் செய்து கொண்டேன்.

ஆனால் இதோ, திருடன் ஒருவன் தனக்கு நல்ல வரும்படி கிடைக்கும்படி இதே சாமியிடம் பிரார்த்தனை செய்கிறானே?

அப்படியென்றால், பிள்ளையாருக்கு சூது செய்வதில் வல்லமை பெற்ற இதே பிள்ளையாருக்கு உலக நடப்பின் உண்மை—பொய் தெரியாமலா இருக்கும்?

அந்தத் திருடனின் முகத்தில் விழிக்க மனமின்றி, நான் ஜம்மென்று என் வீட்டை அடைக்தேன். சாப்பிட்டுப் படுத்தேன்.

அன்று என் தந்தை அயலூர் சென்றிருந்தார்.

வீட்டில் நான் மட்டும்தான் காவல்.

என்னிடம் யார் நெருங்க முடியும்?

ஆனால் அதிசயம் போல, நடுச்சாமத்தில்—

அதே கோமாவரம் கருப்பையா முகமூடி கொண்டு என் முன்னே தோன்றி விட்டான்!

அவனைக் கண்டதும் எனக்குப் புதிய பலம் ஊறியது.

அவனை "யார் நீ?'. என்று வினவினேன்.

அவன் உள்ளதை உள்ளபடி சொன்னான்.

எனக்குச் சிரிப்புச் சிரிப்பாக வந்தது.

"திருடுகிற இந்த ஈனப் பிழைப்பைச் செய்ய உன் மனம் கூசவில்லையா?"

'கூசுகிறது. ஆனால், என் பசிக்கு யார் பதில் சொல்வதாம்?"

"உழைத்துப் புசிப்பது தானே?"

"திருடனுக்கு யார் வேலை கொடுப்பார்கள்?"

"நான் அப்பாவிடம் சொல்லி உனக்கு வேலை போட்டுத் தருகிறேன். இன்றுபோய் நாளை வா!"

"சரி, இன்று இங்குள்ளதை அபகரித்துக் கொண்டு நாளைக்கு நல்லவனாகத் திரும்பி வருகிறேன்.

"என்ன திமிர் உனக்கு?... கேலி வேறு பேசுகிறாயா?"

"இல்லை, உண்மை பேசுகிறேன்!"

"எங்கள் சொத்தைக் கொள்ளையடிப்பதில் நீ எவ்வளவு சந்தோஷப்படுகிறாயோ — அதுபோல நான் உங்கள் சொத்தைக் கொள்ளையடித்தால், உன்னுடைய மனம் எவ்வளவு பாடுபடும்?" என்று நான் கேட்டது தான் தாமதம், உடனே அவன் என்ன செய்தான் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

அந்தத் திருடன் என்பாதங்களில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தான். விழுந்து முடிந்ததும் எழுந்தான்; எழுந்து முடிந்ததும் அவன் பேசலானான்:

"இத்தகைய மகத்தான உண்மையை இது வரை எனக்கு யாருமே சொல்லித்தரவில்லை. உங்கள் போதனைக்குப் பெரிதும் நன்றி! நான் இனி திருட மாட்டேன்!" என்று சொல்லிப் பிரிந்தான்.

ஒன்பதாம் அதிசயமாகத் தோன்றுகின்றதல்லவா?

அப்போது எனக்கு வயசு என்னவென்று இப்போதாவது சொல்லிவிடத்தான் வேண்டும்.

அப்போது எனக்கு வயது

ஆறுமாதம்! ஆறுநாள்...!

சரி.

நான் யாரென்று உங்களுக்குப் புரிந்ததா இல்லையா?

ஆமாம், அடியேன்தான், அரிச்சந்திரன் நெ. 2...!

# நான் பெற்ற செல்வம்

"முகுந்தா! முகுந்தா!! என்னடா செய்கிறே? என்று கேட்டுக் கொண்டே விநோதினி வந்தாள்.

"அக்கா! வீட்டுப் பாடம் செய்றேன். எதற்கு என்னைத் தொல்லைப்படுத்தறே" என்று கேட்டான் முகுந்தன்.

"அப்பா அவசரமாக வெளியே போகணுமாம் சீக்கிரம் வா. ஒரு விஷயத்தைச் சொல்றேன்" என்று அழைத்தாள் விநோதினி.

முகுந்தன் எழுதியிருந்த பாடத்தைப் பாதியில் விட்டுவிட்டு எழுந்து சென்றான். விநோதினி அவனை அழைத்துக் கொண்டு அப்பாவின் அருகில் சென்றாள்.

அக்கா எதையோ சொல்லப் போகிறேன் என்று அழைத்தாள். இப்பொழுது...... அப்பாவிடம் அழைத்து வந்து நிற்கிறாளே. வீட்டு வேலைகள் செய்யவில்லை என்று என்னைப் பற்றிச் சொல்லப்

போகிறாளா? அக்காவிற்கு எப்பொழுதும் கோள் சொல்லும் புத்தி தான்.

முகுந்தன் பயத்தால் நடுங்கினான். அப்பா என்ன செய்வாரோ, என்ன கேட்பாரோ, என்று பயந்தான்.

"முகுந்தா! வீட்டுப் பாடத்தை ஒழுங்காக எழுதி விட்டாயா?" என்று கேட்டார் முகுந்தனின் அப்பா கார்த்திகேயன்.

"இன்னும் எழுதி முடிக்கவில்லை. அதற்குள் அக்கா கூப்பிட்டுக் கொண்டு வந்துவிட்டாள்" என்றான் முகுந்தன்.

"அப்பா! நான் நேற்று கேட்ட...?" என்று பேச்சை நிறுத்தினாள் விநோதினி.

"நினைவிருக்கிறது விநோதினி, இன்றைக்கு மறக்காமல் வாங்கி வருகிறேன்" என்றார் கார்த்திகேயன்.

விநோதினி அப்பாவிடம் என்ன கேட்டாளோ என்று யோசித்தான் முகுந்தன்.

கார்த்திகேயன் கடிகாரத்தைப் பார்த்தார். ஆபீஸ் போக மணி ஆகிவிட்டது. "எனக்கு நேர மாச்சு. விநோதினி! முகுந்தனைப் பள்ளிக்கூடத்தில் விட்டுவிட்டு நீ போ" என்று தன் மகளுக்குக் கூறி விட்டுப் புறப்பட்டார் கார்த்திகேயன்.

முகுந்தனும் விநோதினியும் வாசல் வரை வந்து அப்பாவிற்கு கை அசைத்துக் காட்டி வழி யனுப்பினர். கார்த்திகேயன் தன் மக்களைப் பார்த்தபடி சென்றார்.

"அக்கா! அப்பாவிடம் என்ன வாங்கி வரச் சொன்னாய்?" என்று கேட்டான் முகுந்தன்.

"அதை இப்பொழுது சொல்ல மாட்டேன். பள்ளிக்கூடம் போய் வரும்பொழுது சொல்கிறேன்" என்றாள் விநோதினி.

விநோதினி தன் தம்பிக்கும் தனக்கும் பகல் உணவு எடுத்துக் கொண்டாள். முகுந்தனை அழைத்துக் கொண்டு பள்ளிக்குப் புறப்பட்டாள்.

"முகுந்தன்! முகுந்தன்!!" என்று ஆசிரியர் அவனை அழைத்தார்.

முகுந்தன் பயந்து கொண்டு எழுந்து நின்றான். மற்ற மாணவர்கள் அனைவரும் அவனைப் பார்த்த னர். ஆசிரியர் என்ன கேட்கப் போகிறார்? 'வீட்டுப் பாடத்தை இன்னும் முடிக்காமல் இருக்கிறேன் அதைக் கேட்டால்?' என்று நினைத்தான். அவன் உடல் வியர்த்தது.

"முகுந்தா! உன்னைத் தலைமை ஆசிரியர் வரச் சொல்லி இருக்கிறார். அவரைப் போய்ப் பார்" என்று கூறினார் ஆசிரியர்.

தலைமை ஆசிரியர் வரச் சொன்னார் என்று கேட்டதும் முகுந்தனுக்குப் பயம் அதிகரித்தது. நான் ஒரு தவறும் செய்யவில்லை. என்னை ஏன் வரச் சொன்னார்? எந்தப் பையனாவது தவறு செய்து விட்டு என் மீது பழியைச் சுமத்தி விட்டானா?' என்று நினைத்துத் தயங்கி நின்றான்.

"என்னடா முகுந்தா! இன்னும் ஏன் நிற்கிறே? சீக்கிரம் போ. அவர் வகுப்பிற்குப் போகப் போகிறார். உம்; போ" என்று துரிதப்படுத்தினார் ஆசிரியர்.

முகுந்தன் பயந்து மெதுவாக நடந்து சென்றான். தலைமை ஆசிரியர் தன் அறையை விட்டு வெளியில் வந்தார். முகுந்தனைப் பார்த்தார். சின்னஞ்சிறிய உருவம். கள்ளங்கபடம் அறியாத முகம்.

"முகுந்தா! வா" என்று அழைத்தார் தலைமை ஆசிரியர்.

முகுந்தன் தயங்கியவாறு நடந்து சென்றான். தலைமை ஆசிரியர் அவனை அணைத்துக் கொண்டு முதுகில் தட்டிக் கொடுத்தார். "நீ வகுப்பில் நன்றாகப் படிக்கிறாயா?" என்று கேட்டார்.

நன்றாகப் படிக்கிறேன் என்று வாயால் சொல்லாமல் தலையை அசைத்தான்.

"முகுந்தா! உனக்கு அம்மா இருக்கிறார்களா? அப்பா என்ன செய்கிறார்?" என்று கேட்டார் தலைமை ஆசிரியர்.

"எனக்கு அம்மா இல்லை. அப்பா இருக்கிறார். அவர் ஆபீசில் வேலை செய்கிறார்" என்று கூறினான் முகுந்தன்.

"அம்மா இல்லையா? அதனால் தான் அம்மாவின் படத்தை வரைந்திருக்கிறாய்?" என்று சொன்னார் தலைமை ஆசிரியர்.

அம்மாவின் படம் என்றதும், முகுந்தனுக்கு வீட்டிலுள்ள அம்மாவின் படம் நினைவிற்கு வந்தது. அந்தப்படத்தில் முகுந்தன் இரண்டு வயது குழந்தையாக இருக்கும்போது அவன் நடந்துவர, அவனைத் தூக்குவதற்காக இருகைகளையும் நீட்டிக்கொண்டு இருந்தாள். தாயின் கையில் தன்னை அடைக்கலப்படுத்திக் கொள்ள முகுந்தனும் இரு கைகளையும் தூக்கிக்கொண்டு ஓடிவருகிறான்.

முகுந்தனின் தாய் ஆசையோடு முகத்தில் மகிழ்ச்சி பொங்க தன் மகனைத் தூக்க வருகிறாள். இந்த நினைவு முகுந்தன் மனதைவிட்டு அகலவில்லை. அவன் ஒவ்வொரு நாளும் அந்தப் படத்தைப் பார்ப்பான். அம்மா அவனைக் கைநீட்டி அழைப்பது போல் நினைப்பான்.

கார்த்திகேயன் தன் மகன் தாயின் படத்தைப் பார்ப்பதைப் பலமுறை பார்த்திருக்கிறார். சில

சமயம் தாயின் ஏக்கத்தால் இவன் ஏங்குகிறான் என்று நினைத்து, அவன் கவனத்தை வேறுபக்கம் திருப்புவார்.

விநோதினி முகுந்தனுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும்போதும் அவன் அம்மாவின் படத்தைப் பார்ப்பான். அதனால் விநோதினி தன் தாயின் படத்தை அவன் பார்க்காத இடத்தில் மறைத்து வைத்தாள்.

முகுந்தனுக்குக் காய்ச்சல் வந்தது. அப்பொழுது அவன் "அம்மா! அம்மா!" என்று கதறிக் கொண்டே அழுதான். விநோதினி மறைத்து வைத்த அம்மாவின் படத்தை அவனிடம் கொண்டுவந்து காட்டினாள். முகுந்தன் அந்தப் படத்தைப் பார்க்கவில்லை.

முகுந்தன் நன்றாகப் படம் வரைவான். அவன் பள்ளிக்கூடத்தில் ஓவியப்போட்டி நடந்தது. அப்போட்டியில் பல பள்ளிகளில் இருந்து மாணவர்கள் வந்து, கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு விதமான படங்களை வரைந்தனர். முகுந்தன் தன் தாயின் படத்தை வரைந்தான். அவன் வீட்டில் பார்த்த படத்தை, பார்ப்பவர்கள் அதிசயிக்கும்படி வரைந்திருந்தான்.

போட்டியின் நடுவர்கள் மாணவர்கள் வரைந்த ஓவியப்படங்களைத் தேர்ந்தெடுக்கக் கூடினர். பல

படங்களிலும் சிறந்ததாக முகுந்தன் வரைந்த படம் அனைவர் கண்களிலும் பட்டது.

முகுந்தன் வரைந்த படத்திற்கு முதல் பரிசு கிடைத்தது. அதை அவனிடம் சொல்லத்தான் முகுந்தனைத் தன் அறைக்கு வருமாறு அழைத்தார். தலைமை ஆசிரியர்.

முகுந்தன் தலைமை ஆசிரியரின் முகத்தைப் பார்த்தான். அவர் பார்வை தலைமை ஆசிரியர் கூறியது எந்தப் படத்தை என்று கேள்வி கேட்பது போல் இருந்தது.

"முகுந்தா! ஏன் அப்படிப் பார்க்கிறாய்? நீ ஓவியப் போட்டியில் வரைந்த உன் அம்மாவின் படத்திற்கு முதல் பரிசு கிடைத்திருக்கிறது" என்றார் தலைமை ஆசிரியர்.

'நான் எழுதிய என் அம்மாவின் படத்திற்கா முதற்பரிசு? அம்மா!...என் மனத்தில் உன்னை நினைத்து எழுதினேன். பரிசு உனக்குத்தான். எனக்கில்லை' என்று அவன் வாய் முணுமுணுத்தது.

தலைமை ஆசிரியர் அறையில் இருந்து வகுப்பிற்கு வந்தான். வகுப்பு மாணவர்கள் முகுந்தன் ஓவியப்போட்டியில் முதல் பரிசு பெற்றதற்காக அவனைப் பாராட்டினார்கள்.

"முகுந்தா! உன் ஓவியத் திறமையினால் நம் பள்ளிக்குப் பாராட்டுக் கிடைத்திருக்கிறது" என்றார் ஆசிரியர்.

அன்று மாலை பள்ளியில் முகுந்தனுக்குப் பாராட்டுக்கூட்டம் நடத்தப்பட்டது. முதல் பரிசாகப் பெற்ற வெள்ளிக் கோப்பையை முகுந்தனிடம் தலைமை ஆசிரியர் கொடுத்தார். ஆயிரம் ரூபாய் பணத்தையும் கொடுத்தார்.

விநோதினி தன் தம்பிக்கு ஓவியப்போட்டியில் பரிசு கிடைக்கும் என்று நினைக்கவில்லை. அவன் ஓவியம் வரைவான் என்று மட்டும் நினைத்தாள். அவன் ஓவியத்தில் வல்லவன் என்பது பரிசின் மூலம் தெரிந்து கொண்டாள்.

மாலையில் கார்த்திகேயன் அலுவலகத்தை விட்டு வீட்டிற்குப் புறப்பட்டார். காலையில் விநோதினி தன்னிடம் கூறியதை நினைத்தார். முகுந்தனுக்குத் தேவையான ஓவியப் பிரஷ் ஒன்றை வாங்கிக் கொண்டார். வீட்டிற்கு வந்து தன் மகன் முகுந்தனிடம் கொடுக்கவேண்டும் என்று ஆசையோடு வந்தார்.

முகுந்தன் பெற்ற பரிசுகளைத் தன் தாயின் படத்தின் அருகில் வைத்து வணங்கிக் கொண்டிருந்தான். அதைப் பார்த்ததும் கார்த்திகேயன் திகைத்து நின்றார்.

"அப்பா! தம்பி ஓவியப்போட்டியில் முதல் பரிசு வாங்கி இருக்கிறான். அம்மா படத்தின் அருகில் இருப்பது அவனுக்குக் கிடைத்த பரிசுகள்." என்றாள் விநோதினி.

கார்த்திகேயன் முகுந்தன் அருகில் சென்றார். தன் கையில் உள்ள புதிய பிரஷை அவனிடம் கொடுத்தார். அவன் அதை வாங்கித் தன் தாயின் படத்தின் அருகில் வைத்தான். தன் அருகில் நின்றிருந்த தந்தையின் காலில் விழுந்து வணங்கினான்.

விநோதினி இதைக் கண்டதும் ஆனந்தக் கண்ணீர் விட்டாள். கார்த்திகேயன் இருவரையும் அணைத்துக்கொண்டு, "நான் பெற்ற செல்வங்கள் நீங்கள். இந்த உலகில் உங்களை விட உயர்ந்த செல்வம் எனக்கில்லை" என்று கூறி ஆனந்தப் பட்டார்.